மகாமகோபாத்தியாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20
L327
(6541)

கணபதிதுணை.

# வீரசைவ வினா விடை.

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090

திருமழிசை,
கந்தசாமி முதலியார் குமாரரும்,
சொக்கபுரம்
ஸ்ரீராமலிங்கத் தம்பிரானவர்கள் மாணாக்கருமாகிய
வடிவேலு முதலியாரவர்களால
இயற்றப்பட்டு,

மல்லிகார்ச்சுன பரம்பரை
புதுவை. முத்தைய தம்பிரான் புத்திரரும்,
சென்னை சஞ்சீவிராயன்பேட்டை
வீரசைவ சமயாபிவிர்த்தி சபையின்
காரியதரிசியுமாகிய
முனிசாமித் தம்பிரானவர்களால்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

கலியுகாதி-௫௲ சகசகஉ-ல நிகழும்
விகிர்தி௵ பங்குனி௴

MADRAS:
PRINTED AT ST. JOSEPH'S PRESS.
BROADWAY.

Registered Copy right.

Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090

சிவமயம்.

# அவதாரிகை.

1327 (6521)

மெய்கண்டசந்தானம் துறையூர்ச் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச்செய்த சிவாத்துவித வெண்பா என்னும் நூல் விரிவாயும் பத்தியரூபமாயும் அகலவுரையாயு மிருப்பதால், அதில் அமைந்துள்ள வீரசைவ சமயாசார இலக்கணங்கள் யாவும் பெரும்பாலுங் கற்றோர்க்கேயன்றி ஏனையோர்க்கு எளிதிற் புலப்படா திருத்தலை நோக்கி, அந்நூலினது தாற்பரியங்களையே மிகுதியுந் தழுவிச் சுருக்கிக் கத்தியரூபத்தில் வினாவிடையாக எனது சிற்றறிவுக் கெட்டினவரையில் எழுத, அதைத் திருக்கைலாய பரம்பரைப் பொம்மபுரம் - ஸ்ரீ சிவஞான பாலையதேசிகராதீனத்து சிதம்பரம்-ஸ்ரீமத்-இராமலிங்க சுவாமிகள் பெரிதுங் கருணைகூர்ந்து திருநோக்கமிட்டருளி, அதிலுள்ள வழுக்களைப் போக்கி ஆங்காங்கு அவசியகமாகச் சேர்க்கற் பாலனவற்றைச் சேர்த்தும் நீக்கற்பாலன வற்றை நீக்கியும் திருத்தித்தார்; அவ்வாறே அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இங்ஙனம்,

**தி. வடிவேலு முதலியார்.**

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090

1327
(4521)
(6821)

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

இஃது

சிதம்பரம் பெரியமடம் வீரசிங்காதன கர்த்தராகிய
சென்னப்ப நாயக்கன் பாளையம்
பச்சைகந்த சுவாமிகள் மடம்

## ஸ்ரீமத்-தொரசங்க பச்சைகந்த சுவாமிகள்

திருவாய்மலர்ந் தருளியது.

### ஆசிரியவிருத்தம்.

திருமருவு சென்னைமா நகரினில் விளங்குசஞ் சீவிரா
யன்பேட்டை யிற், றிகழ்மலர்வி கார்ச்சுன பரம்பரை யின்
றபுதுவை சேருமுத் தையதம் பிரா, னொருமையுள மகிழ்ச்
சுதன் முனிசாமி யபிதான னுயர்வார்த்து ளாக மதநி, னுண்
மைமிகு பொருளனைத் தையுமவி னுவிடையாக வுரையெ
னன வுளம கிழ்ந்தே, விரியுநீர்க் கடலுலகி னிறசிவாத் து
விதமெனு மேன்மைபெறு வீர சைவ, வினுவிடை யெ
னும்பெயர்கொ ளொருநூ லியற்றினன விமலவுப சுபர
மனைய, ரரியகுல திலகனமழி சைசகந்தசாமிசெ யருந்தவப்
புதல்வ னறிஞ, ரகமுவக் குஞ்சொக்க புரராம லிங்ககுரு
வடிபணியும வடிவே லனே.

---

இஃது

திருப்பாதிரிப்புலியூர்ச் சந்நிதி வீதியிலுள்ள
திருக்கோவலூர்ஆறுமுகமெய்ஞ்ஞானசிவாசாரியசுவாமிகள்
ஆதீனம் ஐந்தாவதுபட்டம்

## ஸ்ரீமத்-சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்

திருவாய்மலர்ந் தருளியது.

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

எல்லா வளமுஞ் சிறந்தோங்கி யிலங்குஞ் சென்னைத்
திருப்பதியி, னல்லா ருறையுஞ் சஞ்சீவி ராயன் பேட்டை

நலங்கவின்ற, தொல்லாா மல்லிகாாச்சுனமாந துகளில பெ
ரிய ப்ரமபரையிற், பல்லாா மதிக்க வுதித்தவனபா வலா
சோ புதுவை நகராளனே. (க)

சீாசா னமது முதலைதய தமபி ராான்றன் றிருபபுதலவ,
னோசான முதறி யெளிதினலகி யிலங்கும வீர சைவததா,
ஞாசான முனிசா மிககுரிசி னயாநது வேணடித திரும
ழிசை, யூாசா லுபசுப் பிரமணிய வுயாநற குலததி லுதிதக
வனே. (உ)

இலங்கு சிவாத்து விதசமய னெறிலாா கந்த சாமிசுத,
னலங்கொள சொாகக புரததாதி னததி னடியாா குருமணி
யாய, விலஙக லில்லா விராமலிஙக விமலன சீடா தமின
மேலோன, கலஙக லிலவாம பெருஙகுணததான கறறோாக்
கினிககுங கனிநிகாவோன. (ங)

கூாந்த வடிவே லபிதானன் குறிககும வாது ளாகமத
திற, றோநத பொருளைக கததியமாத திகழந்தெல லவாக்
கும பயனபடுவா, ஞோநது வீர சைவவினு விடையென
றெருநூ லியறறினனு, லாாந்த வதனமேன மையையுலகி
லளவிட டறிவா ரெவாமாதோ. (ச)

---

இஃது

திருக்கைலாய பரம்பரைப் பொமமபுரம்

ஸ்ரீ - சிவஞான பாலைய தேசிகராதீன மாணுக்கரு

ளொருவராகிய ம-ா-ா-ஸ்ரீ,

**நல்லாற்றூர்-சோமசுந்தர ஐயரவர்கள்**

இயற்றியது.

**அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.**

சீரார் சென்னை யடுத்தொளிர்சஞ் சிவி ராயன் பேட்டை
யினிற், பேரார் முதலை யன்றவத்திற் பிறங்கு முனிசா

மிச்சுருண, னீரார் வீர சைவத்தி னிலையை யுலகோ ரொளி துணரவா, னேரார் வசன காவியமா வியற்றித தருக வென வேணட. (க)

வேணடு மதுசற காரியமாய விமலப் பொருளா மதிவிளக் கைகத, துணடி விளககற காதரமாயத துலங்க லாலச சொ றகொணடே, காணட வருமவா துளமுதலா கமததின பொ ருளக ளினிதுசெறிந், தீணட வீர சைவவிஞ விடையொன றியறறித தநதனனே. (உ)

தநதோன யாரென றிடின்மழிசைத தகையாா பதியிற செஙகுநதா, நநதா மரபிற் சிவாததுவித நவிலா சார வியற புலமை, மைந்தாா கந்த சாமிபெறற வரபுத திரனு வயங கிடுவோன, செநதாா முருகற் கன்புடைய சீலன வடிவேற் புலவோனே. (ங)

---

இ:ம்சு

திருக்கைலாய பரமபரைப பொமமபுரம
ஸ்ரீ சிவஞான பாலைய தேசிக ராதினதது சிதமபரம
ஸ்ரீமத-இராமலிஙக சுவாமிகள மாணுக்காகளி
லொருவரும,
சிதம்பரம் சைவபபிரகாச வித்தியாசாலை
உபாத்தியாயருமாகிய
மா-ா-ா-ஸ்ரீ, சோ-குமாரவீரையரவர்கள்
இயற்றியது.

நிலைமண்டல வாசிரியப்பா.

திருமக டலைவனே டருமறைக் கிழவனென்
றிருவரும பண்றியு மெகினமு மாகி
யடிமுடி தேடியு மறியா முதல்வன்
படிமிசைச் சைவப் பயிரினை வளாப்பா

னநதியை விடுபப வசவநா யகனென
வநதமில கணஙகளோ டவனியிற் றோன்றனு
மெலலையி லின்ப மிறைஞசுவோாக் கீயு
மலலம தேசிக னருட்குரு வடிவா
யனனவாக குணாததிய வஙகலிங கயிககமாயத
துனனிய நெறியினைத் துணிநதிட லரிதெனு
வததகைப் பொருள்களை யையந் திரிபறக
கததிய மாகக் கழறுகென றன்பொடு
சென்னையிற சஞசீ விராயன் பேட்டையின
மனனுமல விகாாசசுன வளாபரம பணையோன
புதுவைமுத தைய தமபிரான புததிரன்
சதுர ஞமுனி சாமிவேள வேணடக
குருலிஙக சங்கமங குறிககொளு நேய
மருவிய மனததன மழிசையந தலததினோனை
மிளிாநூ லுணாச்சியன வீரசை வததோன
வளருப சுபபிர மணிய குலததினன்
றநதையா தற்குத் தவமபுரி கநதவேண
மைநதனு யுதிதது வளாகுண நிரமபலிற
றககாா தகவில ரெனப தவரவ
ரெசசத்தாற் காணப படுமென றியமபிய
நிறைமொழி யறிஞராய் நிகழுமவள் ளுவனாா
மறைமொழிக் கிலக்கிய மாகவே வாழவோ
னிக்குவ லயமபுகழ் சொாக்கபு ரம்வாழ
தக்கவ னிராமலிங் கத்தம பிரான்சரண
கதியெனக் கொண்டு கலைகற்ற மாணவன
மதிபெரி துடைய வடிவேற் புலவன்
கற்றவ ரனறியே மற்றவா யாவரும்
பறறுட னுய்ந்து பரகதி யடைய
வீர சைவ வினாவிடை யென்னப்
பாரிலோா நூலைப் பரிவொடு மியற்றிய

பழுதா காது பரவுற வுலகி
லெழுதா வெழுத்தி னியைவித் தனனே.

---

இஃது
திருப்போரூர் தேவஸ்தானம
சிதம்பர சுவாமிக ளாதின பரம்பரைத் தருமகாத்தா
பூததாவதுபட்டம ஸ்ரீமத்-சிவசங்கர தமபிரான
அவாகளது அநுமையின்படி,
ஷை ஆதீனவித்துவான்
ம-௱-௱-ஸ்ரீ, சுப்புலிங்க ஐயரவர்கள்
இயற்றியது.

நிலைமண்டல வாசிரியப்பா.

மணிவளை கொழிக்கு மகரால யநதனை
யணிகெழு தாரிய மாக வணைநது
சிருறு மருவிச் செழுமித் திலத்தின்
ருருறு திகிரியைத தனமெனப் படைத்த
வனநதை யென்னு மருமக ளாக
நனநதலைக் கிடநத நருமதா ணியெனுந
தொணடைநன் ஞட்டினிற் சூழவுறு நகரெலாம
விண்டபன் மணியா விளஙகுறச் சிறநத
நாயக மணியென நவெனுற் றெவாக்குந
தாயக மாகத் தருசெனனை நகரினின
முராசியின் பாத முகிழ்த்துறு சஞசீ
விராயன பேட்டையில விளங்குறு முதலவன்
மலலிகாாச் சுனபரம் பரையினில் வந்தே
யெலலையில் வளமொடு மினிதுறை குரிசில்
சிவபெரு மானைச் செங்கையி லிருத்தித்
தவமிக வழிபடுந் தனிவீர சைவன்

புதுவைமுத் தையதம பிரானருள் புத்திரன
விதுவையொத திலஙகிடும விபூதியே முதலாம
பஞ்சமுத திரையைப பரிவொடு மநுதினந்
தஞ்சமாப் புனைமுனி சாமித தமபிரான
காமிக முதலா கமஙகளி னந்தத்
தேமிகக கூறுஞ் சிவாத்துவி தமெனுரு
சோகம் பாவனை சொறறிடு நல்வி
ராகமப பொருள்க ளனைத்தையுந தொகுத்தே
யிததலத தெவரு மெளிதி லுணாநதிடக
கத்திய மாகக கழறுகென றுரைத்தலு
மனனவை யளவிலா வரியநூ லுணாநதே
மஞரினர்க் கன்றியே மறறையாக கரிதெனுச
சானறோ ருடைதமெனத தகைபெறு நாட்டினி
லானறோக் குறைவிட மாநதிரு மழிசையி
லுபசுபர மணிய குலததினி லுதிததே
கிபமறற கலைகளை நேடியே யாய்வோன
முந்தை நாளினின் முழுத்தவ மியறறிக்
கநத சாமிவே ளீன்றிடு காதலன
றாரதலம புகழநதிடுந தனிசொர்க்க புரமவா
ழிராம லிங்கதே சிகன்றனக கினியனாய்த
தொன்னூ லனைத்துந தொடாபுட னுயநதே
யநநூ லுரைபபடி யமைநதுறு நியதியோன
சமர புரிககுகன விமல சரணகளைத
தமதுள மிருத்தியத் தகைமையின வழாது
மனமொழி மெய்களின் வணஙகலி னன்றிவீண்
டினமொழி யாவகை திரமபெறு முறுதியோ
னங்கலிவ கைக்கிய மாகுவ தொன்றே
துங்கமெய்ந் நெறியெனத் துணிநதிடு சூழ்ச்சியோன்
மயக்குபுன் சமய வல்லிருண மெலிய
வியக்கு சிவாக்க விகச்சுடர் பரம்பி

ஞானசூ ரியனென நாடொறும் விளங்கத்
தானமா வீர சைவ விஞவிடை
யென்னவோ ரரியநூ லியற்றியச் சிட்டுத்
தனனிகர் பெருமபுகழ் சாரதனன மாதோ.

---

இஃது
திருநெலவேலி ஜில்லா
ஊற்றுமலை சமஸ்தான வித்துவானகளி லொருவரும
ஸ்ரீமத-தண்டபாணிசுவாமிகள் மாணுக்கருமாகிய
ம - ௱ - ௱ - ஸ்ரீ,
தி. கந்தசாமிப் புலவ ரவர்க ளியற்றியது.

சந்தவிருத்தம்.
குழிப்பு.

தான தய்யன தானன
தான தய்யன தானன
தான தய்யன தானன. தனதாஞ.

மாக வெள்ளோதி லாவணி
சோதி வைகிய மானசன்
மான திவயசு பாகர குணமேலோன்,

பாக மெய்திய பாவெனு
மாரி பெய்வடி வேன்முகில்
பாவின் மையற வோதின ஞலகூடே,

யூக மெஃகிய பேர்முத
லாக நொய்தினி லாசற
வோதி மெய்யுணர் வோடினி யுயுமாறே,

வேக வைகுலி சாதிப
ஞதி தூய்யமு தேசிகர்
வீர சைவவி ஞவிடை யெனுநூலே,

---

இஃது
மஹாவித்துவான்-திரிசிரபுரம்,
மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை யவர்கள் மாணாக்கரும
நார்மல்காலேஜ் தமிழ்ப்பண்டி தருமாகிய
ம-௱-௱-ஸ்ரீ, சோடசாவதானம்
தி. க. சுப்பராய செட்டியாரவர்கள்
இயற்றியது

## நேரிசை யாசிரியப்பா.

கடல்விளிம் புடுத்த கண்ணகன் வரைப்பி
னிடம்படு மன்பதைக் கின்னருள் சுரப்பான்
மரகத வல்லி மானும் பசுங்கொடி
விரவிடு முக்கண மேயசெங் கரும்பு
தானே யாய வானோ பெருமான
ஐமமுகந் தமமு னதிகமுற் றோங்கும
ஈசா னததினி லியலபுறத் தோனறிய
வாதுள மென்னு மாணபுறு மாகமத்
தோதிய பகுதியு ளொன்றாய் விளங்கி
யையந் திரிபறு மைந்தத் துவிதத்
துயல்வறு சிவாத்துவித வுண்மை நிலையைச்
சோமநா தனெனுந தொல்புகழ்ப் பெரியோ
னேம மாக வியறறுபா டியத்தை
யங்க லிங்கசை யோகபா வனையை
யிங்கட் செய்யுளா வியற்றினர் பலரோ
யவைபல் லோரு மாய்குத லரிதென்
றெவமற வசனமா யியற்றுக வென்னப்
பாண்டிமுத லாகத் தோன்றுநா டெட்கு
மதோ யகமா நடுநா டதனுட்
செங்கதிர்ச் சாலி பைங்கதிர்ச் சாலியோ

1327
652

# சிறப்புப்பாயிரம்.

நறவு கொள்ளவிண் ணுறறென மீசசெலு
நறுவிய மலாசெறி நனனில முடித்த
புதுமை மாறுப புதுவைநன் னகரான
மலவி கார்ச்சுன வானபரம பணாயின
ஞுலவியல் வழாத சுகுண மேரு
மூதறைய நலலோன முதுதவப் பேற்று
விததலை வந்த விணையில கலைஞன்
பசசைகந தையரின விச்சையி னின்றோன
நனிசால புடைய முனிசாமிப பெயரியோ
ஞுளளத் தனபோ பொவின ஞகப
பலகலைச சானறோ பாடுபெற றோங்குந
தொலபதி யாய தொண்டை நாடெனும
வளவிய மகட்கோ வாண்முக மாக
வளவிலபல வளஞசான் றவிதிரு மழிசையோன
எஙகுந தமபுக ழினிதுற நிறுத்துஞ
செஙகுநத மரபு சீாபெற விகரிலாக்
கநதாபா லனபுகொள கநத சாமிமா
றநதநற் தவத்தாற றாணியில வநதோன்
சமான மிலலாக் குமார தேவாதம
பாமபணா சீடனும பணபிற் சிறநதோன
றாரதலம புகழ்நதிடு மிராமலிங கததவன்
றனபா லினறமி ழனபா லுணாநதோன
றூலுட் சிறநதபன னூலகளுங் கறறோன்
வீர சைவ விதிவழா நடையோன
பாரிற றன்புகழ் பரப்பிய மேலோன்
வடிவே லெனன னொடிதரும பெயரியோன்
கற்றோ ரன்றி மற்றை யோருந்
தெறறென வுணாநது தெளிய வாய்ந்து
வீர சைவ வினவிடை யென்ன
வாரிசூ ழுலகில வளரப
பகுப்புறுப பலமைய வகுத்துரைத் தனனே,

வேலுமயிலுந்துணை.

மகாவித்வானாகிய புரசை அஷ்டாவதானம
சபாபதி முதலியா ரவாகள மாணாககா
## திருமயிலை - சண்முகம் பிள்ளை யவர்கள்
இயற்றிய
### நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

பாாபடைதத திருவுந்திப பணணவனன றயனுனறறு
மோபடைதத வேளவிவயி னிலஙகவருங் காஞசியெனும்
போபடைதத நகாதனபாற பிறங்கவிரு நீாவைபபிற
சீாபடைதத பாலிவளஞ செறிதொணடை நனாட்டில ()

குளனெங்குஞ செங்குமுதங் குாமபெஙகும பொாறகுவியல
களனெஙகும பசுஞசெநநெல் காவெஙகுந தேனீட்டம
வளனெஙகு மிதனினிலை மழிசைஙக ரெனககலவிக்
களனெங்கு மகிழவிககுங் கவினபெறுமிந நகாமமா. (௨)

இந்நகாவாயக் குனறெறிந்த வெஃகவேற காதனெம்மான்
தனனிகராமவீரரொனபான் றகைசாலுமுதுக்குறைநதோா
நன்னாமர பிடைக்குமர நாயகனா ருட்செறிவாற
பொன்னனைய குணவைத்ய லிங்கமால் பொலநதனனல்.()

இத்தகையபெருந்தகைமுன் னிருஙகலைகளொருங்குணாநத
முத்தனெழிற சனகனென மொழியவநது பூதியும்பெற
றிததரையி லிருமகாப் பயந்தனனிம் மகாாதமமின்
மெய்த்தநெறிக் கந்தசா மிபபெரியோ னொருவனுளன. (௪)

இனனவன்றான் புரிதவத்தி னியற்றமிழோ ரஞஞானமு
மனனியதோா மூன்றினொடு வணைதெய்தி னிருபாலு
முனனெய்து மெனறலான் மூவர்தமைப் பயந்தவருள்
நனனலஞசா னடப்பிறந்த நமபியினிங கிசையுற்றான. (௫)

இன்னமகனியாவனெனினெழில்வடிவேலெனும்பெயரான
மனனுறுமெம்மிராமலிஙக வன்ளலிடங் கலைபயின்றான

முன்னவரும் வீரசைவ சித்தாந்த முடிபொருங்கோர்ந்
தன்னசிவப் பிரகாச வடிகளென நிலவினனே. (௬)

தானபெறற பேறுலகந தான்பெறுதல் சிறப்பெனமுன்
றேனபெற்ற மொழிசசெறிவாற றெளிவியோாஙவினருஙகு
கானபெறற கடிக்கொனலைறக் கணணியா னருட்டுணையால
யானபெறறீண் டுவககிற்பா னிறுமபூதி னலகினனே. (எ)

விஞவிடையின வீரசைவ சிததாநத வியனிலைமற்
றனுதிமல முததனடிக் கனபேயும பசைசகநத
னெனுவுலகேத திறைவனடி யிணைபரசும பரமபனையில
மனுதியுறு முத்தையதம் பிரானெனவோர வளளலுளன

இதமல்நெஞ சகமுடையின னவனிலங்கு மணிமாடப
புதுவையெனும் வதுவையருப் பொலனகரந தனினமாநது
விதுவணிமா முடிவிமலன வியனகழலே சாரபெனுமோர
சுதனெனுநம முனிசாமித் தோன்றலைநல கினனனறே. ()

இததகையோன் வீரசைவ சிததாநத வியல்பனைததது
நிததநில வச்செய்விஞ விடைநூலை நெடிதுணாநது
பததிரசம பலகவிரும பாரிலெழு தாவெழுததி [னே.
ஆயததினிதிந தனனதறகீண டுெற்றுகைமமா றெவனமன

---

இஃது

திருத்தணிகை

கந்தசாமி ஐயரவாகள் மாணுக்கருமா

திரு எவ்வுளூர - வெஙகடாசல செட்டியாரவாகள்

குமாரருமாகிய ம-ா-ா-ஸ்ரீ,

இராமசாமிச் செட்டியாரவர்கள்

இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வானகு லெழிலமுகிலசார மதிற்புதுவை முதலைதைய மணி
பன மைந்த, ஞனகு டாமணிகோ முனிசாமித தமபிரா

னனபால வேணட, மானரு சனைகொண்மழி லைசக்கநத சா
மிசுதன வடிவே லெனனு, ஞானரு ரியனவீர லைசவவிஞ
விடைபுரிநது நலமபெற ருனே.

---

இஃது
சென்னை சஞ்சீவிராயன் பேட்டையில
ஸதாபிததிருக்கும
வீரசைவ சமயாபிவிாததி சபையாருளொருவரும,
இநநூலாசிரியா மாதுலரும,
ஆயுள்வேதியருமாகிய ம-ா-ா-ஸ்ரீ,
## ஆலந்தூர்-முத்துசாமி முதலியா ரவர்கள்
இயறறியது.

### இரட்டை யாசிரிய விருத்தம்.

பூமடந தையினவதன மண்டலச சிந்துரப் பொடடெ
னுஞ சென்னை நகரிற, புகழொடு விளஙகுசஞ சீவிரா யன
பேட்டை புரிதனுறு புணணி யததாற், பொற்பினுடன வா
ழுமலலி காாசசுன பரமபரைப புனிதனுயா வீர சைவம,
பொருளெனக் கொள்புதலை முதனைய தம்பிரான் புத
திரன முனிசாமி யாங்,

காமனைவெல லெழிலினுன் வீரசை வத்தினங கங்களயா
வும்மு லகுளோா, கரிசற வுணாந்துய்யு மாறுகத தியமாக்
கவினவிஞ விடைய தாகக், கழறுகென வனபினவெகு
நான்வேண்டி வந்ததாற் காதலொட தற்கி யைந்தே, கமல
வா விகணிறைந் தணிகொடிரு மழிசையென் கடிநகர்க் கு
தத லைவனெம;

மேமவுப சுப்ரமண் ணியகுலத் துறபவ னெலாவதது வி
தியு மேதகு, மேற்றமிக் குயர்சிவாத் துவிதவா சாரனல வி
யற்றமிழ்க் கடல் கடந்தோ, னெனவெந்த நாளினும் புகழ்
கொளெங் கண்ணினுக் கிணையான கந்த சாமி, யிடைவி

டா மற்செய்தவ மோருருக் கொண்டதென வின்றிடு செபுத்
திற னருட்கு.

சேமவிகர் சொர்க்கபுர ராமலிங் கப்பெயர்த் தேசிக சிகா மணிக்குச், சீடன்வடி வேல்வாத் தாகமத் திறமெலாந் தேராந்தியா வரும்வி யக்தே, சிரமேற்கொள் வீரசை வத்திறவி னுவிடைத் திவ்யநூல் செய்தீக் தனன், செப்பிடு மதன்ற லகமை புகலவென் னிடிலாதி சேடற்கு மரிது மன்றே.

---

இஃது
இந்நூலியற்றியோரது கனிட்டபிதாவும்
காணுபத்தியாதி சத்தியரூபாசிரியருமாகிய,
திருமழிசை
முத்துச்சாமி முதலியா ரவர்கள்
இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எண்ணரிய வரன்மதலா யெழில்வடிவே லுமதரா மிய லும் சைவத்; துன்னரிய வர்தனவா கமமாதி யுத்தரமா மோதும் வீர, சன்னிதியையல் தக்கவீங்க ளையோக நெறி புனைத்தசய் ஞானக் கன்றே, மீக்கிசைவீந் கியைந்தவ மிரா மலிங்க முனிக்கென்மட் டடங்கும் மாதோ.

சிறப்புப் பாயிரம் முற்றிற்று.

# ஆசிரியர் துதி.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

முந்தைநா ளெங்குடியின் முதுக்குறைந்தோர்க்
கருள்புரிந்த முதுகுன் றத்தில
விந்தைபெறு சிவாத்துவிதி யாங்குமர
தேவர்பதம் விழைவின் றேடென்
தந்தையினை யீன்றவயித் தியலிங்கத்
தவரடியித் தமிழ்பற்றச்
சிந்தைதெளி வித்தருளெம் பிராமலிங்க
முனிவர்சரண் சென்னி சேர்ப்பாம்.

இஃது
வீரசைவ சமயாபிவிர்த்தி சபாப்பிரசங்கியாராகிய
இந்நூலாசிரியரால்
இயற்றப்பட்டது.

1327

உ.

கணபதிதுணை.

# வீரசைவவினாவிடை.

## காப்பு - வெண்பா.

பாரிலுயர் முன்னோர் பகர்ந்தசுரு திப்படியே
வீரசைவ ருக்கோர் வினாவிடையைத்—தீரமுடன்
செய்யவரம் பாலிக்குஞ் சிந்தூரத்தி ஞனனைவெங்
கையனருட் செம்பொற் கழல்.

## முகவுரை.

ஒரு வீரசைவன் தான் மேற்கொண்டுள்ள வீரசைவ நிலைமைகளனைத்தையும் தெளிவாய்க்கேட்டறிய விரும்பி, அவற்றைத் தனக்குப் போதிக்கத்தக்க ஒரு ஆசிரியரை நெடுநாளாகத் தேடிக்கொண்டிருக்கையில், அவனது பரிபக்குவகாலம் சமீபித்தமையால் சிவபெருமான் திருவருளே திருமேனியாகக்கொண்டெழுந்தருளியது போன்று ஒரு வீரசைவாசாரியர் எதிர்ப்பட, பிறவி தரித்திரன் பெரும்புதையல் கண்டதுபோல் மனமகிழ்ந்து, அவரை எதிர்கொண்டழைத்துவந்து, அவரது பாதங்களை விளக்கிச் சந்தன புஷ்பாதிகளால் அருச்சித்து, அப் பாததீர்த்தத்தைப் பருகி, ஓராதனத்தில் எழுந்தருளச்செய்து, “சுவாமீ! நெடுநாளாக அடியேன் வீரசைவசமயாசார நிலைமைகளனைத்தையும் விளங்க அறிந்துகொள்ள விருப்புற்றிருந்தும் தேவரீரைப் போன்ற தேசிகர் கிடையாமையால் எனதெண்ணம் நிறைவேறவில்லை; இன்று தேவரீரைக் கண்டபொழுதே எனதெண்ணம் நிறைவேறுங்காலம் சமீபித்ததெனத் தெளிந்தேன்; ஆதலால் உணர்த்த வேண்டுவன வனைத்தும் உபதேசித

தருளல் வேண்டும்." என விண்ணப்பித்தனன், அது கேட்ட ஆசிரியர், திருவுள மகிழ்ந்து "அன்பனே! இப்பூவுலகத்திலே நினக்கு இத்தன்மையவாகிய அரிய விஷயங்களை ஆராய வேண்டுமென்னுங் காதலுதித்தமைபற்றி மிக வியக்கின்றேம், இனி உனக்குள்ள சந்தேகங்களை யெல்லாம் முறைப்பட வினவுவாயாயின் அநுக்கிரகிப்போம்." எனக் கட்டளையிட்டவுடன் சீடன் வினவத்தொடங்கினன்.

## நூல்.

**1.** வினா.—சுவாமீ! உலகத்தின்கண்ணே சைவம் வீரசைவமென்னும் இரண்டிற்கும் பேதமுண்டோ?

விடை.—சைவமென்பதற்குப் பொருள் இன்னதென்றும், அதன் இலக்கணம் இப்படிப்பட்டதென்றும் முன்னர் அறிந்துகொண்டால் பின்னர் வீரசைவநிலைமை உனக்கு எளிதில் விளங்கும்.

**2.** வினா.—அப்படியானால் சைவமென்பதற்குப் பொருளென்னை? அதன் இலக்கணமென்னை? இவற்றை யருளல் வேண்டும்.

விடை.—சிவசம்பந்தம் சைவம். அச்சிவனுக்குரிய பூஜை நைமித்திக முதலியவைகளை ஆகமவிதி தவறாது செய்தலே அதனிலக்கணம்.

**3.** வினா.—சிவசம்பந்த மென்ப தென்னை?

விடை.—ஆன்மாவுக்கும் சிவத்துக்கும் உள்ளசம்பந்தந்தான் சிவசம்பந்தம்.

**4.** வினா.—இச்சிவசம்பந்தம் எவற்றாலுதிக்கும்?

விடை.—அகப்பத்தி புறப்பத்தி என்னும் இரண்டாலும் உதிக்கும்.

**5.** வினா.—அப்பத்திகளின் இலக்கணமென்னை?

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்


விடை.—சிவபிரானைப் பேதமாயர்ச்சித்தல் புறப் பத்தியென்றும், அபேதமாயர்சசித்தல் அகப்பத்தி யென்றும் கூறப்படும்.

**6.** வினா.—மேற்சொன்ன புறப்பத்தி அகப்பத்தி களில் உட்பிரிவுக ளுண்டோ ?

விடை.—புறப்பத்தி - சரியை கிரியை என இரண் டாகவும், அகப்பத்தி-யோகம் ஞானமென இரண்டா கவும் பிரிவுபட்டு, இந்நான்கும் முறையே தாதமார்க் கம் சற்புத்திரமார்க்கம் சகமார்க்கம் சன்மார்க்கம் என் பன பெயர் பெறும்.

**7.** வினா.—சரியையாவது யாது?

விடை.—இயம நியமங்களைக் கடைப்பிடித்து, அருணோதயத்திற்கு ஐங்கடிகைக்குமுன் எழுந்து, விபூதிதரித்து, சிவபிரானைத் தியானித்து, ஆகமப்பிர காரம் சவுசம் தந்ததாவனம் ஸ்நானம் அநுஷ்டான முதலியவற்றைச் செய்து, தனது நந்தன வனத்திற் புகுந்து, மலர்முதலியனகொய்து, மாலைகளாகக் கட் டிக் கொடுத்தலோடு சிவாலயம் புகுந்து, திருவலகு திருமெழுக்கிட்டு, பூஜா திரவியங்களை ஆசசகர் கள் கையிற் கொடுத்து, அபிஷேக அஷ்டவிதார்ச்ச னை சோடசோபசாரங்களுடன் செய்வித்து, பிரத க்ஷிண நமஸ்கார தோத்திரங்களுஞ் செய்து, தனதி ஷ்டம் நிறைவேறப் பிரார்த்தித்துக் கொண்டு, ஆலயத் தைவிட்டரிதினீங்கி, ஆசாரியரையும் அடியார்களை யும் வழிபட்டு, அதிதிபூசையும் பண்ணி, இந்நியமந் தவறும லொழுகுவது.

**8.** வினா.—கிரியையாவது யாது?

விடை.—மேற்சொல்லிய சரியையில் வழுவாமை யோடு சிவ தீக்ஷையும் ஆன்மார்த்த சிவ லிங்கமும் ஞானசாரியரால் அநுக்கிரகிக்கப்பெற்று, பூஜைக்கு வேண்டிய உபகரணங்களெல்லாம் அமைத்துக்கொ

ண்டு, நித்திய நியமங்களை முறையேசெய்து, பின்பு ஓராதனத்தி லிருந்து பூதசுத்தி அந்தரியாகமுஞ் செய்துகொண்டு, சவுரமுதல சண்டாந்தமாக மந்திரக்கிரியா பாவனைகளில் உலோப மில்லாமற் சிவபெருமானைப பூசித்து, பெட்டகத்தி லெழுந்தருளப் பண்ணியபின ; சிவாக்கினியை யுண்டுபண்ணி அதனையும ஆசாரியனையும சிவாகமங்களையும பூசித்து அதிதிபூசையும செய்வது.

**9.** வினா.—யோகமாவது யாது?

விடை.—மேற்சொலலியபடி சிவலிங்கப்பெருமானை வேறாகவைததுப் பூசியாது, அப்பெருமான சிததுஞ் சடமுமாகிய சாவததிலும உள்ளும புறமபும நிறைந்திருத்தல போலவே தனது உள்ளும்புறமபும நிறைந்திருததலை யுணர்ந்து, அதற்கடையாளமாகத் தனது சரீரததில இடைவிடாமல் தரித்துக்கொண்டு அத்துவிதமாகப் பூசிப்பது.

**10.** வினா.—அத்துவித மென்பதற்குப் பொருளென்னை?

விடை.—சிவத்தோ டிரண்டறக் கலத்தலென்பது பொருள், இது பற்றியே சிவாத்துவிதமெனனும பெயரும் இதற்குண்டு.

**11.** வினா.—அத்துவித மென்பதற்கு வேறுபொருளுண்டோ ? உண்டேல் அவற்றையும் அருளலவேண்டும்.

விடை.—பாடாணவாதிகள்-சிவனுக்கும் ஆன்மாவுக்கும் இருளுக்கும வெளியாகிய ஆகாயத்துக்கும எப்படியோ அப்படிபேதமென்பர்; அபபடிகொண்டால், ஒன்றுக்கொன்று பிரயோசன மில்லாமற் போம்; ஆகையால அது அத்துவிதமாகாது. மாயாவாதிகள்-பொன்னுக்கும் ஆபரணத்திற்குமபோல் அபேதமெனபர்; அவ்வாறுகொள்ளின், பெறுவாணும் பேறுமில்லாமற்போம்; ஆகையால் அதுவும்அத்துவிதமாகாது.

சிவாவேசவாதிகள்-சொல்லும பொருளும்போல் பே தாபேதமெனபர் ; இவவாறு கொள்ளின ஸிஷ்பிரயோ சனமாதலால இதுவும அத்துவிதமாகாது.

**12.** வினு.—ஆனால் இநதசிவாத்துவித சமபநதம் எததனமையது?

விடை.—கண்ணொளியும ஆதித்தனொளியும போ ல இரணடற நிருபபதாம, இதில மேறகூறியவைக ளிலுளள ஆக்ஷேபனைகள் செயதற் கிடமிலலையாத லால இதுவே சிததாநதம.

**13.** வினு.—இவவதுவித சமபநதம உடலுக் கோ உயிருககோ?

விடை.—ஆனமா பெத்தாவத்தையில உடலோடு டலாய்க் கலநது பிரிவுபடா திருக்கையால இவவுட லுக்கே முநதச சிவசமபநதம வேண்டும. ஏனெனில்; இததூலதேகம பிரகிருதி வழிததாகிய பஞ்சபூதசை யோக சுக்கில சுரோணித மூல சபததாதுமயமாகிய கனமவேதுவாய, ஆகாராதிகளுடனே கூடி அசுத்த மாய்,நரை திரை மூபபுக் கிடமாய், அவலமாய்ப பிறந் திறநது வருகையால, ஆன்மாவும இவ்வுடலோடுகூட இரணடறக்கலந்து தேகானமாவாயிருத்தலாலே,இத் துலவுடறகுநோநத ஆசூசமறும்படியாக இத்தூலவு டலிற்றனே எக்காலமும நின்மல பரசிவ சகளமூாத் தமாகிய இஷ்டலிங்கததை அன்புடன் சிரசுமுதலி ய தானங்களில் தரித்து வழிபடுதல வேண்டும. இவ் வாறு தரிபபதே சிவசம்பநதம். மற்றையவை பேத சமபந்தமாகு மல்லாது சிவசமபந்த மாகா.

**14.** வினு.—ஆனால் இச்சம்பந்தம் தூல தேகத்தி ற்குமாத்திரம் போதுமோ? சூக்கும காரண தேகங்க ட்கும் வேண்டுமோ?

விடை.—இலயம் போகம் அதிகாரம் என்றும், சக் தி யுக்தன் பிரவர்த்தன் என்றும, சிவன் சதாசிவன் ஈ

சன என்றும், நிட்களம சகளநிட்களம் சகளம என்று ம பெயர் பெற்ற இஷ்ட பிராண பாவ மென்னும மூவகை இலிங்கங்களையும முறையே தூல சூக்கும காரண சரீரங்களிலே தரித்தல வேணடும.

**15.** வினா.—இம்மூவகை இலிங்கங்களைத் தரித்தலினால வரும பிரயோசன மெனனை?

விடை.—இம்மூவகை இலிங்கசமபந்தத்தால தத்துவசுத்தி வரும், அதனேடுஆணவமல சுத்தியுமாம; இவவாணவமல சுத்திவரவே ஆனமசுத்திபிறந்து ஆனமலாபமானசிவ அநநியசமபநதவாழவுபெறுவதாம

**16.** வினா.—ஆயின இவற்றைத தரித்தபின் யாதுசெய்தல் வேண்டும?

விடை.—அவவிலிங்கங்களை வழிபடுவ தன்றியும, தனக்குப புசிப்பாக வரும பஞ்ச தன்மாத்திரையின போகங்களை, அவவவ விலிங்கங்களுக்கு அரப்பிதஞ் செய்து புசித்தல வேணடும.

**17.** வினா.—இவற்றை எப்படி அரப்பிதஞ் செய்தல வேண்டும?

விடை.—அதிகார லிங்கமாய்ப் புறமபிலே சகள உருக்கொண்டு விளங்கும இஷ்டலிங்கத்திற்கு ரூபத்தையும், போகலிங்கமாய் உள்ளும புறமபும் நிட்கள சகள உருக்கொணடு விளங்கும பிராணலிங்கத்திற்கு உருசியையும, இலயலிங்கமாய உள்ளே நிட்கள உருக்கொணடு விளங்கும பாவலிங்கத்திற்குத் திருப்தியையும அர்ப்பித்தல் வேண்டும. இவ்வாறு அரப்பிதஞ் செய்து புசிப்பவனே வீரசைவனாவன்.

**18.** வினா.—அவ்வாறு அர்ப்பிதஞ் செய்தலால் வரும்பயன் யாது?

விடை.—அர்ப்பிதஞ்செய்வதனால ஜனனமரணங்கட் கேதுவாகிய கன்மம நாசமாம், நாச மாகவே இதாகிதமறும், அறவே இருவினையொப்பு வரும், வர

வே மலபரிபாகம் பிறக்கும், பிறத்தலால் சத்திநிபா தத் தன்மையுண்டாம, அதனல சிவானநதா நுபவ ங கிடைக்குமென்று சிவபெருமா னருளிய சிவாக மஙகள் கூறும.

**19.** வினு.—சிவலிங்கதாரணம் புரிநத தேகம எ வ்வாறும?

விடை.—இவ்வண்டத்திலே சிலையாதி உருவங்க ளில சிவபெருமானை விதிபபடி தாபிககின, அவவுரு வம அநத க்ஷணநதொடஙகிச சிவலிங்கமெனவும, அததானம சிவாலய மெனவும பெயாபெறுவ தனறி யும, சிவபெருமான் சாநநிதியராக விளஙகவும பெறு வதுபோல, பிணடமாகிய இவவங்கமும சிவலிஙகந தரிததது முதல சிவலிஙகத்தல மெனவும, சிவாலய மெனவும பெயா பெறறுச சிவபெருமான சாநநிதிய ராக விளஙகப பெறும.

**20.** வினு.—ஆனல அண்டமும பிண்டமுமாகி ய இரணடிடததிலும தாபிககும இலிஙகஙகளுக்குப பெயா வெவவே றுணடோ?

விடை.—அண்டததிலே யுள்ள சுயமபு முதலிய இலிஙகஙகளுககுத தாபரலிஙகமெனறும, பிணடத் திலே தரிக்கபபடும இலிஙகஙகளுக்குச் சரலிஙகமெ னறும சிவாகமங்கள் விதிக்கும.

**21.** வினு.—மேற்கூறிய தாபரலிங்கத்திற்கும சர லிஙகத்திறகும தாரதமமிய முணடோ?

விடை.—பொதுவகையால ஆன்மவர்க்க மெல் லாம ஓரஜாதியேயாயினும,சிறப்புவகையாலதேவர்மு தலிய சங்கமஙகள் சிறநதாறபோல, யாவர்ககும ஆன மார்த்தமாய் நினறு இஷ்ட காமியங்களைக் கொடுத்த லால தாபரலிங்கத்தினும் சங்கமலிங்கமே சிறநதது.

**22.** வினு.—அண்டம பிணடம இரண்டும சடமா க,பிண்டத்தைமாத்திரம சரமென்று கூறுவானேன்?

விடை.—சிவசையோகத்தால வளர்ச்சி முதலிய குணத்தையுடைய இபபிணடததில சதா ஞானதிக்கமான சிவலிங்கத்தைத் தாபிகக, அச்சிவலிங்கந தேகாபிமானியாகிய சீவஇன இரணடறககலநது, அவ்வுயிர்ச் செயலைக காட்டாது தன்னுள் அடக்கி, அச்சிவனது அபிமானத் தலமாகிய தேகததைத் தனது கோயிலாகக்கொணடு, தனனுள அடஙகி யிருக்குஞ சிவனெனவன் தன்னைப் பூசிக்க, தான் அபபூசையினைக் கொள்ளலானும், அச்சீவனுக்குத் தான சிவனுக இருக்கையானும, அத்தேகத்துககுச் சரமெனப் பெயராயிற்று.

**23.** வினு.—இவ்வாறுன அஙகலிஙகிகளுககுத தேகபநத மிலலையோ?

விடை.—சிவநேசாகள் தமமுடைய சுகதுக்கபோகஙகளை அநுபவித்தற் காதாரமான மூவகைததேகங்களையும் மூவகை இலிங்கஙகளுக்குமு ஆலயமாக்கி, ஆசாரியரால தேகாதாரத்தைவிட்டு இலிஙகாதாரததைபபற்றி, முன்னைதேகமுன்னிலையாக விடயபோகங்களைப் புசிததது போலவே, சிவலிங்கமுன்னிலையாகச் சிவப்பிரசாதத்தை உட் கொள்ளுதலால அவாகட்குச் சரீரபக்தங் கிடையாது.

**24.** வினு.—ஆயின் மேற்கூறிய பேறுபெறுவதறகுச் சிவசம்பநதமாகிய திருவெண்ணீறு தரித்தலும உருத்திராக்கமணி யணிதலுமே போதாவோ?

விடை.—விபூதி உருத்திராக்கங்கள் சிவனது ஏகதேச சொரூபக்குறியே யலலது சாட்சாத் சிவசொரூபமன்று; ஆகையால் அவ்விரண்டும் அவரவர்கள் பரிபக்குவத்திற்குத் தக்கபடி பதமுத்தியைக் கொடுக்கவல்லன வன்றி மேலான முத்தியைக் கொடுக்க மாட்டா.

**25.** வினு.—ஆனுல் இலிங்க தாரணஞ் செய்து

கொண்டவர்களுக்கு விபூதி உருத்திராக்கங்கள் வேண்டுவதில்லையோ?

விடை.—ஓர் கன்னிகைக்குத் தனது கணவனது ஆக்கினைசொரூபமாகிய திருமங்கிலியதாரணமே முக்கியமாயினும், மஞ்சட்பூச்சும் ஆபரணங்களும் இன்றியமையாதனவாக வேண்டியிருத்தல்போல, சிவசொரூபமாகிய இலிங்கதாரணம் முக்கியமேயாயினும், விபூதி உருத்திராக்கங்களும் அவசியகம் வேண்டற்பாலனவே.

**26.** வினா.—சிவலிங்கதாரணம்போல விபூதி உருத்திராக்கங்கள் சைவனென்பதைப்புலப்படுத்தாவோ?

விடை.—அவையும் புலப்படுத்துமாயினும், ஓர்கன்னிகை ஆபரணாதிகள் அணிந்திருப்பினும் அவை இவள் ஒருவன்மனைவி என்பதைப் புலப்படுத்தாமல், மங்கிலியம் ஒன்றுமே புலப்படுத்துவதுபோல, விபூதி உருத்திராக்கங்களினும் சிவலிங்கதாரணமே சைவனென்பதைத் தெளிவாகப் புலப்படுத்தும்.

**27.** வினா.—சிவசம்பந்த முடையவனைச் சைவனென்னாது வீரசைவனென்பது என்னை?

விடை.—ஜனனமரணமுதலிய கற்பனைகளைக்கடப்பிப்பவர் சிவபெருமானொருவரேயென அப்பெருமானையன்றிப் பிறிதொரு கடவுளரையும் வழிபடாமையும்; வேதாகமங்களிற்கூறும் குரு லிங்க சங்கமமென்னும் மூன்றினிடத்தும் முறையே அநுக்கிரக சித்தமாக உண்டாகும் சுத்தம் சித்தம் பிரசித்தமெனும் முப்பிரசாதத்தையேயன்றிப் பிறவற்றைக் கொள்ளாமையும்; கற்புடையாள் தன்கணவனிடத்துப் போக விதங்களைப் புசித்தின்புறுதலேயன்றிப் பிறபுருஷ ரின்பத்தை இச்சியாமைபோல், இஷ்டலிங்கத்தினது பூசை தரிசனம் தீர்த்தம் பிரசாதம் திஷ்டை தியானம் இவைகளால் மகிழ்வதன்றி மற்றை

மூர்த்தங்களின் பூசைமுதலியவற்றில் மகிழாமையும்; அங்கலிங்கிகளோடு பரிசித்தல புசித்தல வசித்தலாதிக ளியற்றுவதன்றி ஏனையோர்களிடத்து அவை இயற்றாமையும ; ஆதிய கோட்பாட்டை யுடைமையால இவனுக்கு வீரசைவனெனப பெயராயிற்று. அன்றியும இன்னும அனேக ஏதுக்களுள.

**28.** வின.—இஷ்டலிங்கத்தை எக்காலத்திலும இடைவிடாமல தரிக்கவேணடுவ தெனனே?

விடை.—பிரவாகம அதிகரித்துக கரை தெரியாது நிலையழிந்துவரும ஓர் பெரிய ஆற்றைக் கடக்க வேணடிய ஒருவன, ஓர் தெப்பத்தைக கைவிடாது பற்றி நீந்துதல வேணடும; அவவாறு நீந்துபவன இடையில அத்தெப்பத்தைக கைவிடுவானாயின் அப்பிரவாகத்தில முழுகி அதோகதியாய்ப போய்விடுவானலலவா? அதுபோல ஜனனமாகிய பெரிய பிரவாகத்தைக்கடந்து செல்ல வேண்டி அதைக் கடத்தும தெப்பமாகச் சிவலிங்கதாரணம செய்துகொணடவன, அதை ஒரு கணபபொழுது விட்டு நீங்கினானாயினும் அந்த ஜனனப்பிரவாகத்தில அழுந்தி அதோகதியாய்ப போய்விடுவா னெனபதற்குச் சநதேகமிலலையாதலால, சதா தரித்திருக்கவே வேணடும.

**29.** வின.—ஆனல் தூலதேகத்தில் இஷ்டலிங்கதாரணமிலலாமல் சூக்கும காரண தேகஙகளில பிராண பாவ லிஙகங்களை மாத்திரம் தரித்துககொணடா லென்னே?

விடை.—அப்படியன்று, தூலதேகத்தில் இஷ்டலிங்க தாரணமும் முக்கியமா யிருத்தல வேண்டும. ஏனெனில்; தூலதேகம் பிடித்த தெப்பத்தைக்கொண்டுதான் அருபமாகிய சூக்கும காரண தேகங்களும் கரைசேர வேண்டும்; அதுபோல தூலதேகம இஷ்டலிங்க தாரணத்தைப் பெற்றுப் பரிசுத்தத்தி

னை யடைந்தால்தான மன முதலிய சூக்கும கார ண தேகங்கள் பரிசுத்தத்தினை யடையும், வேறு வி தததா லடையா.

**30.** வின.—அப்படியாயின் தூலதேகததில இ ஷ்டலிஙகத்தைத் தரித்தலே போதாதோ?

விடை.—போதாது, ஏனெனில; காயத்தாற் செ யத கருமம மனததாலும மனத்தாற்செய்த கருமம் காயததாலும நீஙகாது, வாக்காற் செயததும அப படியே. ஆகையால தூல சூககும காரணமாகிய முத்தேகததும மூவிலிஙகங்களேயும முறையே தரி ததல வேணடும.

**31.** வின.—இபபடிபபட்ட வீரசைவத்திறகுப் புறமபான நடைக ளெவை?

விடை.—தனக்கு விதிதத நிததிய நியமங்களைக் கைவிட்டு, ஆகாராதிகளாற காலஙகழிதது, பாவகன மததுக்கீடாக நரகயாதனையில வருநதி, ஈனயோனிக ளிறபிறந்து, சிவபபிரசாதமலலாத மாயாவிடய ரூப மாகும இநதிரிய உச்சிட்டஙகளைப புசிக்கினறதும; மாயா சமபநதமாகிய இத்தேகததைத தீக்ஷாகாலத தில மநதிரங்களினுற சுத்திபணணி, இஷ்டலிங்கம எ ழுநதருளியிருக்கச் சிவாலயமாகச செய்வியாததும; சுரோததிராதி ஞானேநதிரிய வழித்தாகவரும சத தாதிவிடயஙகளை, அநதநத தானததினின்றும பஞச சாதாக்கிய வடிவமாய்ப பிரசாதலிங்கமுதல் ஆசா ரலிஙகமீறுகவுளள ஐவகை இலிஙகங்களுக்கும் அர்ப் பித்து, இலிங்கப் பிரசாதமாகப் புசியாததும; தன்க ணவனையே வழிபடுகடவுளெனக கொண்ட ஓர்கற புடைய மனைவியானவள்-சகல போகஙகளையும த ன்னுயகனுக் குரிமையாக்கித் தான் அநுபவிபபது போல, சகல விடயசுகங்களையும் தானுகப புசியா மல் தனது நாயகனுகிய இஷ்டலிங்கத்துக்கு அர்ப

பித்து, அவ்விலிங்கப் பிரசாதமாகப் புசியாததும்; நாவி பாஷாணம் முதலிய விஷபதார்த்தங்களைப் புசிக்கின் இத்தேகத்தினின்றும் சீவன் நீங்கிப்போமெனக் கருதி அவைகளைப் புசியாததுபோல, இஷ்டலிங்கத்துக்கு அர்ப்பிக்க யோக்கியமல்லாத தீய பதார்த்தங்களைப் புசித்தால் சிவபிரான் நிலைபெறுமெனத் துணியாது, அவற்றை யுண்டு நரகத்தில் அழுந்துவதும்; பாலுண்ணும் சிறுகுழந்தைக்கு மாந்தமுதலிய பிணிகள் நேர்ந்தபோது, அப்பிணிகளுக்குத்தக்க மருந்தைக் கொடுத்தால் அது சகியாதென்றுணர்ந்து, தாயானவள் அம்மருந்தைத் தான் புசித்துத் தன் முலைப் பாலால் அக்குழந்தையின் நோயைத் தணித்தல்போல, சிவபெருமான் ஆன்மாவிற்கு நேர்ந்த ஆணவமுதலிய பிணிநீங்க மாயா போகங்களாகிய ஔஷதத்தைத் தான் அங்கீகரித்து, அப்பிரசாதத்தை யருளி அப்பிணியை அகற்றுவாரென்ப துணராது, அவைகளை மாயாபோகமாகவே புசிப்பதும்; இவ்வுலகத்தின்கணே எவனாயினும் தன்னை ஒத்தவரோடிருந்து உண்ணும்போது, தனக்கொருவிதமும் அவர்க்கொருவிதமுமாக உணவுகளை வேறுபடுத்தினும் கடைக்கடையவன் என்பதைக் கேட்டிருந்தும், தன்னுயிர்க்குயிராயிருக்கும் சிவனுக்கொரு பதார்த்தமும் தனக்கொரு பதார்த்தமுமாகச் செய்து கொள்வதும்; ஆகிய இவை போன்றவைகளே வீரசைவத்திற்குப் புறம்பான நடைகள்.

**32.** வினா.—வீரசைவன் இஷ்டலிங்கப் பிரசாதமே புசிக்கவேண்டுமென்னும் நியதி என்னை?

விடை.—தனக்கு இன்னவனே கணவனென்னும் ஓர் நியமமில்லாத பொதுமாதானவள் திரவிய வாஞ்சையால் அருந்தல் பொருந்தல் முதலியனவற்றைப் பலரிடத்தும் அங்கீகரிப்பள்; கற்பினையுடைய ஓர் மங்கையோ பரபுருஷனைக் கண்ணினாலேயும்பாராது

தன் கணவனையே தெய்வமெனக் கொண்டு எப்போதும அவன் வசப்பட்டு அவனிடத் துண்டாகிய போகவிதங்களையே அநுபவிப்பள், அதுபோல வீரசைவனும பராரதத முதலிய அந்நிய தேவதாப் பிரசாதஙகளை அங்கீகரியாமல் தனது இஷ்டலிங்க பிரசாதமே உட்கொள்ளல் வேண்டும்.

**33** வினா.—ஆயின், வீரசைவன் மூர்த்தி தலம் தீாததம என்னும் மூன்றையும அநுஷ்டிக்க வேண்டிய திலலையோ?

விடை.—அம்மூன்றும அநுஷ்டிக்க வேணடிய வைகளே யாயினும், அநிஷ்டமாகிய மலமாயாகன்மஙகளைப போக்கி இஷ்டமாகிய சிவானநதாநுபூதியைக கொடுக்குங் காரணததால இஷ்டலிங்கம எனபபடும சிவலிங்கத்தைதத தூலதேகத்தில தரித்த தனறியும சூக்கும காரண தேகங்களில பிராண பாவ லிங்கமூாததிகளைத் தரிததும, அவறறிறகு இநதேகஙகளைச் சநநிதானமாக்கியும, அறுபத்தாறுகோடி தீாத்தங்களையும இத்தேகஙகளிலே யொடுக்கியும், ஞானசாரியா மூர்ததி தலம தீாத்தமெனனும மூன்றையும சாநித்தியமாக விளங்கும்படி செய்திருத்தலால்;இவற்றுல முறையே தரிசிததும வசிததும முழுகியும் எளிதிலே தமது வினைகளை ஒழிததுக கொள்ளுதலாகிய அநுபவ நிலையை விடடுப புறததிலே பெரும்பாலும அவற்றை நாடிச சஞ்சரிக்க வேணடிய திலலை.

**34**. வினா.—வீரசைவர்களுக்குப் பஞ்சசூதகங்களும உண்டோ?

விடை.—ஞானசாரியர் சுவஸ்திகாரோகண முதலிய தீக்ஷைகளால் மாயா காரியமாகிய இத்தேகத்தைச் சுத்திகரித்துச் சகல சூதகங்களையும் ஒழித்து மந்திர சொரூபமாக்கி, நின்மலமாகிய இஷ்டலிங்கத்தைப் பிரசன்னமாய்ப் பஞ்சாவத்தையினும் இவ

னுடைய ஆரப்பண அவதானங்களை அங்கீகரித்து அநுக்கிரகம பண்ணிக் கொண்டு எழுந்தருளியிருக்கும்படி தாபிக்க இவனும் சந்நிதானம விட்டுப பிரியாம லிருத்தலால, வீரசைவனுக்குப பஞ்ச சூதகங்களு மிலலை.

**35** வின —வீரசைவர்களுக்குச் சாதிகன்மமும் குலாசாரப் பற்றும உண்டோ?

விடை.—பலவித விறகுகளும் அக்கினியிற்பட்டெரிந்தபோது நெருப்பெனப பெயர்பெற்ற வாறுபோல, முன்வினைக் கீடாகச் சனித்த பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திர அநுலோம பிரதிலோமர்களில் யாவரேயாயினும மலபரிபாக மிருதியினால ஞானுசாரியரை யடைந்து ஞானதீக்ஷை பெற்றவுடன முனசொன்ன சாதிதர்மஙகள் போய் சிவசாதியா யிருததலால, இவாகளுக்கு அவ்விரண்டு மிலலை.

**36** வின —வீரசைவன் தன் ஆசாரியனை எவவாறு கொளளல வேணடும?

விடை.—சிவபெருமானே தன்னைக் குறித்து ஆசாரியமூாததமாய் எழுநதருளிவநது, இடைவிடாது தொடாநது வரும ஜனன மரணஙகளைத் தீாத்து, சிவாநுபூதியைத் தருமபொருட்டுத் தீக்ஷாகாலததில தனது தூல சூக்கும காரணமெனனும தனுததிரயஙகளையும சோதித்து, பின்பு ஆனமா எஙகும வியாபியா யிருந்தாலும அதனது விளக்கம இருதயமாகையால் இருதயத் தானததைப் பற்றியிருக்கும அவ்வான்மாவை நாராசமுத்திரையினால வாங்கித் தமதிருதயத்தில் வைத்து, மலத்திரயஙகளும மாறச் சுத்தனுய் விளக்கி, பினனும் தமது கரதலத்தினாலே அவனுடைய இருதயகமலத்தில் தாபித்துத் தமது புததிரனுகப பிறப்பித்தலால்; அவ்வாசிரியரைப் பிதாவெனவே கொள்ளல்வேண்டும. இதுபற்றியே இவனுககுக் குருகர சாதகனென்னும பெயருமு உணடு.

1327 (-6521)


**37**. வினா.—இத்தகைய ஆசிரியரால வீரசைவருக்கு உபதேசிககபபடும மஹா வாக்கியங்கள் எவை?

விடை —அவை பல உண்டேனும் அங்கலிங்க ஐக்கியத்தைக் கரதலாமலகம் போல விளக்கலால தத்தொமசி மஹா வாக்கியமே முக்கியமாக உபதேசிக்கப் படுவதாம.

**38** வினா.—ஆனால், தத்தொமசி என்னும் வாக்கியததிற்குப பொருளென்னை?

விடை.—தத் எனபது சிவம, தொம என்பது சீவன, அசி என்பது இவ்விரணடினது ஐக்யம. அது நீ ஆனாய என்பதற்கும இதுவே பொருள்.

**39**. வினா.—இத் தத்தொமசி வாக்கியத்திற்கு வேறுபொருள் கொள்வதும உண்டோ?

விடை.—அனேகம உண்டேனும் இன்னும் ஓர முக்கியப்பொருள் உணடு, எபபடியெனனில.—தத் பதம என்பதற்குப் பொருள் பிரமமாதலின் அருளே திருமேனிகொண்டு வருதலால, பிரமமென்பதற்குக் குரு எனபது தெளிவாம; தொமபதம என்பதற்குப் பொருள் ஆன்மா, அது இலிங்கவடிவாதலின் இலிஙகமென்பது தெளிவாம்; அசிபதம என்பதற்குப் பொருள் ஆனாய் என்பதாகலின், சங்கமம என்பது தெளிவாம். எனவே இலிஙகமே உடல், சங்கமமே உயிர, குருவே அறிவு. இவ்வாறிருத்தலால் உடலில உயிரும் உயிரில் அறிவும கலநதிருத்தலபோல, இம மூன்றும ஒற்றுமைப்பட்டே யிருக்கும். இவ்வாறன்றி இவவான்மாவை இரக்ஷிக்க வேண்டும் என்னும சுத்த சிவத்தின் நினைவு இலயம், இதுதான் சங்கமம. அந்நினைவின்படி இரக்ஷிக்க வேண்டியது இவ்வாறெனப் பகுத்தது போகம, இதுதான் இலிங்கம். அப்பகுப்பின்படி அநுக்கிரகம பண்ணினது அதிகாரம், இதுதான் குரு. இதனால சங்கமத்திற்கு இருப்பிடம்

இலிங்க மென்றும், சங்கம வியாபாரம் குரு வென்றும் கொள்வதும உணடு.

**40**. வினா.—ஆன்மா விற்குச் சிவலிங்க அத்துவிதசமபந்தம இல்லாவிடின் மற்றை இரணடும அத்துவித சம்பந்த மாகாவோ?

விடை.—ஒரு போதும் ஆகா, எப்படி யெனில் - தேகத்திற்கு ஆசுசம இருக்கு மளவும உயிருக்கும அறிவுக்கும ஆசுசம் உண்டு. அதுபோல இலிஙக சம்பந்தம இல்லாதபோது, சங்கம சம்பந்தமும சற்குரு சம்பந்தமும் அவரால அருளும பிரசாத சமபந்தமும் அற்றுப்போம

**41**. வினா.—குரு லிங்க சங்கம சம்பநத மன்றிப பிரசாத சம்பந்தமும வேண்டுவானேன்?

விடை.—பிரசாத சமபந்தம் இல்லா விடின் சிவ ஞானம் உதயமாகாது. சிவ ஞானம் உதயமாகாவிடின் தன்னை முதலாகக் காட்டாது அநாதியே ஆனமாவினுடன் சகசமாய்க் கூடி நின்று ஜனன மரணதுதை உண்டாக்கும் ஆணவமல சம்பந்தம மாறாதென்று சிவாகமங்கள் சொல்லும.

**42**. வினா.—ஆகமங்களிற் கூறும் சைவம் எத்தனை வகைப்படும்?

விடை.—சாமானியசைவம், மிசிரசைவம், சுத்தசைவம், வீரசைவம் என்னும நான்குமே ஆகமசித்தாந்தத்திற்கு ஒத்தவை. ஏனைச் சைவங்களெல்லாம் இவற்றுள் அடங்கும்.

**43**. வினா.—சைவம் நான்குவகைபபடும் என்பதற்கு ஆகமப் பிரமாணம் உண்டோ?

விடை.—உண்டு; வாதுளாகமத்தில், "சைவஞ்சதுர்விதஞ் ஞேயம், சாமான்யம் சுருணுவென்முகா, சாமான்யம் மிஸ்ருதஞ்சைவா சுத்தவீரம யதாக்கிரமம்" என்பதே.

**44.** வினா—ஆயின், அந்நான்கு சைவங்களின் விவரங்களைத் தெரிவிக்கவேண்டும்?

விடை.—சாமானிய சைவமாவது—ஆசாரியரால் சமயதீக்ஷைபெற்று, விபூதி உருத்திராக்கம தண்டு க மண்டலம என்று சொல்லப்பட்ட உபாஙகங்களை மேற் கொண்டு, திரிகால ஸ்நாநாநுஷ்டானம் முடித்துககொண்டு சிவாலயஞ்சென்று திருவலகு திருமெழுக்கிட்டுத தனக்கு இயன்றன கொடுத்து நிவேதிககச்செய்து, பிரதக்ஷிணம நமஸ்காரம தரிசனம தோத்திரம முதலியனவற்றை என்பு நெக்கு விட உருகி அனபினுற் பலகாலுஞ் செய்து வருவதாம

**45** வினா—இவர்க்குச் சாமானியசைவர் எனப் பெயா வருவானேன்?

விடை.—சிவலிஙகம் கணடவிடததுபபோய் வழிபட்டுவருவதே யல்லாமல் இவர்களால பூசிக்கப்படும சிவலிஙகம் இதுவென ஓர் நியமம இலலாமையால, இவாகட்குச் சாமானியசைவா எனப் பெயராயிற்று.

**46.** வினா.—மிசிர சைவத்தின் இலக்கண மென்னை?

விடை.—மேற் சொலலியது போலவே விபூதிமுதலியன தரித்துக் கொண்டு, ஞானசாரியரால் விசேடதீக்ஷைபெற்று, அவ்வாசாரியரால தனக்கென ஓா சிவலிங்கப் பெருமானை எழுந்தருளச் செய்துகொண்டு, சூரியன்முதற் சண்டேசுராந்தமாகிய ஆவரணதேவதைகளை அவரவர்க் குரித்தான மந்திரங்களினுல அருச்சித்து, பின்பு அம்மூர்த்திகளையெலலாம் தன்னுற்பூசிக்கபபடும் அச்சிவனுடனே ஒன்றுகக்கூட்டி ஏகமாய்ப் பாவிப்பதுதான் மிசிரசைவம.

**47.** வினா.—இதற்கு மிசிரசைவம் என்னும் பெயர் என்வந்தது?

விடை.—சிவதீக்ஷைமாத்திரமே செய்துகொண்டு

சிவபூஜை செய்யாம லிருப்பவர்களுடைய கிருகத்தி லேயும் அன்னாதிகளை வாச்சியாமற் புசிக்கையால, இவர்களுக்கு மிசிரசைவர் என்ப பெயர்வந்தது.

**48.** வினா.—சுத்த சைவத்தின் இலக்கணம் என்னை?

விடை.—சமய விசேட நிருவாணமென்னும் மூவகைத் தீக்ஷைகளைப்பெற்று, விபூதிமுதலிய சாதனங்களையும் தரித்துக்கொண்டு, ஆசன மூர்த்தி மூலங்களை விஸ்தாரமாக அறிந்து, சவுராதி சண்டாந்தமான தேவதைகளை மிசிரமாகக்கலந்து பூசியாது அத்தேவதைகளின் சொரூபத்தையும் சிவலிங்கத்தின் சொரூபத்தையும் குருமுகமாகக் கேட்டறிந்து, அந்த ஆவரண தேவதைகளையும் சிவலிங்கத்தினையும் பூசித்தற்கு வேண்டுவனவற்றைச் சேகரித்து வைத்துக்கொண்டு, மந்திரக்கிரியா பாவனைகளில் வழுவாமல் சிவலிங்கப் பிரதிஷ்டைபண்ணி, பரார்த்த கிரியையாயின கருஷணாதி பிரதிஷ்டாந்தம் பிரதிஷ்டாதி யுச்சவாந்தம் உச்சவாதி பிராயச்சித்தாந்தம் செய்தும் - ஆன்மார்த்த பூஜையாயின் அதற்குரிய கிரியைகளோடு ஆன்மசுத்தி முதலிய ஐவகைச் சுத்திகளை யியற்றியும் விதிப்படி சிவபெருமானைப் பூசிப்பது.

**49.** வினா.—இதற்குச் சுத்தசைவமென்ப பெயர் வருவானேன்?

விடை.—மேற்கூறிய சாமானியமும் மிசிரமும் போல்வ தன்றி இங்கேகூறிய விதிப்படி அநுஷ்டிப்பதாதலின் இதற்குச் சுத்தசைவம் எனப்பெயராயிற்று.

**50.** வினா.—வீரசைவத்தின் இலக்கணமென்னை?

விடை.—பக்குவவிசேடமுற்ற ஒருவனுக்குச் சிவனைவிட்டு நீங்காமலிருப்பதுவே உண்மைமுத்தி என்னும் அறிவு உண்டாகும். அப்போது மலபரிபாக மிகுதியால் சிவன் ஸ்ரீபாதசத்தி அவ்வான்மாவிற் பதிய

அச்சிவசத்தி விளக்கத்தால் தேகாதி பிரபஞ்சத்தில் உபாதிஜனிதது, பதிபசுபாச இலக்கணங்களைப் பிரித்தறியும் எணணத்துடன சிவாகமங்களையோதி, அச்சிவாகம விளக்கத்தால் அச்சத்திக்கு மேலாகிய சற்பத்திபிறக்க, அச் சற்பத்தியால பொனனாற் சமைத்த மதயானையின் உருவத்தை ஓர் கம்மியன் குகையில அடைத்து அழலிலவைத்து உருக்கி யானையென்னும பெயரைமாற்றிச் சிங்கத்தினது உருவாகச் செய்தமைபோலவும்-வேட்டுவனென்னும குளவியானது புழுவைத் தன உருவாக்குதல் போலவும்-ஞானசாரியரானவா "பிரமன தனது மனச் சங்கற்பத்தினால கனமத்திறகு ஈடாகப் பூதபரிணாமமாய அநுசிதமாகச் செய்யபபட்டிருக்கும" இததேகத்தை ஞானாக்கினியால தகித்து திவ்விய தேகமாக்கி, அத திவவிய தேகததினிடமாக இருக்கும ஆனமாவைச் சிவ சொரூபமாகத் தீக்ஷிக்கப் பெறுவதாம.

**51.** வினா.—இததீக்ஷை எவவாறு பெயாபெறும?

விடை.—அபேதஞான சாமபவதீக்ஷை எனப பெயர் பெறும.

**52.** வினா.—இவ்வித தீக்ஷை பெற்ற வீரசைவாகள சிவனை வழிபட்டுக்கொண்டு எவ்வா றிருததல வேண்டும ?

விடை.—தனக்கென ஓர் அறிவற்றுச் சடமாயிருக்கும் உடலானது சித்தாயிருக்கும உயிரைக்கலந்து அவ்வுயிர்போன்று அவவுயிர் வேண்டிய கருமஙகளையெல்லாம் செய்யினும் சுதநதரம முதலிய சுகதுக்காநுபவம் அவ்வுடலுக் கிலலாததுபோல, இச்சிவலிங்கமும் சுதந்தர வீனனாகிய ஆன்மாவைக்கலந்து அவனைக்கொண்டு பூஜையான அர்ப்பண அவதானம முதலிய எல்லாம் அங்கீகரித்துக் கொள்ளுதலால், இவ்வீரசைவர்கள் கவலை யொழிந்து தற்சுதநதரமின்றிப் பேதமற் றிருக்கவேண்டும.

**53.** வினா.—வீரசைவர்களுக்குப் பூஜையில தவறுநேரிடில் பிராயச்சித்த மென்னை ?

விடை.—வீரசைவர்கள் மன வாக்குக் காயங்களை அசைத்துச் சிவனுக்கு ஆசன மூர்த்தி மூலங்களாக கற்பித்துப் பேதமாய் அர்ச்சியாமல யான எனதென னும செருக்ககன்று அபேதமாய் அர்ச்சிகக வேணடு மாதலால, மந்திரககிரியா பாவனையால் வரும லோபஙகள் அவர்கட்கு நேரா;நேராதபோது குறறமிலலை: குற்றமிலலையாகவே பிராயசசித்தமு மிலலை

**54** வினா.—இவ்வாறு அபேதபூஜை செயவதாற பயனென்னை ?

விடை.—தேகாதிபிரபஞசம மெயயாய சர்வவிடயமுந தானாய்த் தனக்கு மேலொரு கர்ததாவிலலை யெனச் சாவ சுதநதரனா யிருநதவன, பரிபாக விசேடததால தேகாதி பிரபஞசததைப பொய்யெனக் கணடு, சர்வவிடயத்தினினறும பிரிநது, தனககு மே லொரு கர்த்தா உண்டெனக் கண்டு, தன் சுதநதர வீனத்தையுமஅறிநது, தன்னை முழுவதும சிவனுககுக் கொடுத்துச் சிவசமபநதமுற் றிருத்தலால; இத்தனமையுடைய வீரசைவனுக்கு அச்சிவன் பிரதியுபகாரமாகத் தம்மையே கொடுப்பர்.

**55.** வினா.—ஆயின் இவ்வீரசைவ பூஜைக்கு ஆவாதனமும் விசர்ச்சனமும் உண்டோ ?

விடை.—ஆவாகனம் விசர்ச்சனம் முதலியவெல்லாம ஏகதேசப் பொருளுக்கே யல்லது பரிபூரணப பொருளுக் கில்லையென்பது நூற்றுணிபாகவின்,சிவாத்துவிதமாக வழிபடும் வீரசைவ பூஜைக்கு அவை இரண்டுமில்லை. இது சிவாத்துவிதமாக இருத்தல்பற் றியே சிவபெருமானும் இதில மிருந்த விருப்பமுடையோம் எனவும், இதை அநுஷ்டிப்பவரோ மற்றை மூவகைச் சமயத்திற்கும் ஆசிரியத்துவம் பூணுதற்

குரியவ னெனவும, இதுவே நமக்கு உயிராகும மற்றை சாமானியம மிசிரம சுத்தம என்னும மூனறும உடலாகும எனவும சிவாகமங்களில அருளிச்செய்திருக்கின்றனர்.

**56.** வினா.—ஆசிரியர் தமமை யடைநத வீரசைவனுக்கு முனனர் எவ்வாறு கற்பித்து அநுக்கிரகிக்க வேணடும் ?

விடை.—வீரசைவ சமயாசாரத்திற்கு விதித்த சடூஸ்தல ஆசாரம் பற்றி அஙகத தலம ஆறும இலிங்கத் தலம் ஆறும அறிநது, அர்ப்பித அவதானங்களிலே அயாச்சி யிலலாமல நடப்பது சமயாசாரமாம அது சதாசாரம நியதாசாரம கணுசாரம என்று மூவகைப்படும். இவற்றுள் சதாசாரமாவது - தீக்ஷையினுலே பூர்வஜனமமபோயக் குருரூபமாவது: நியதாசாரமாவது - இலிங்கத்தினுலே மனோ சஞ்சலத்தை யொழிதது இலிஙகவிரதமாக நிற்பது: கணுசாரமாவது - சஙகம பததியினுலே யான் எனது எனப தொழிய நிறபது: இநதநியமஙகளில் வழுவுநேரிடில இரௌரவாதி நரகஙகளில விழுதற் கேதுவாமென்று ஆகமஙகள் கூறுதலால வழுக்கள் வந்தனவாயின் உடனே பிராணனை விடவேண்டும என்னும இத்தனமையவாகிய உறுதி வாக்கியஙகளைக் கற்பித்து, அதற குடன்படடுத தொணடூணை டொழுகும பரிபாகமுடையவனுக்கே அநுககிரகம புரிதலவேண்டும.

**57.** வினா.—இவ்வாறு தீக்ஷைபெறும வீரசைவர்கள் எத்தனைவகைப் படுவாகள?

விடை.—வீரசாமானியர் வீரவிசேடர் வீரநிராபார் என மூவகைப்படுவர்.

**58.** வினா.—இமமூவர்க்கும முறையே செய்யப்படும தீக்ஷைகள் எவை ?

விடை.—கிரியா தீக்ஷை, மந்திர தீக்ஷை, வேத தீக்ஷை என்பனவாம்.

**59** வினா.—ஆயின், வீர சாமானியருக்குக் கிரியாதீக்ஷை எவவாறு புரிதல் வேணடுமே?

விடை —மநததரம் மநத மென்னும சத்திநிபாதத்தையுடைய வீரசாமானியருக்கு ஆசிரியர் சிவாகம விதிப்படி தீக்ஷா மணடபம வகுத்து, அதறகுரிய கிரியைகள் அனைத்தும தவறுதியற்றி, அஸ்த மததக சையோகததாலும சுததிகரித்தறகுரிய மநதிரங்களாலும தேககசுததி புரிவித்து இஷ்டலிங்கந தரிதது அவனை நோக்கி, "திரிகாலமாயினும ஏக காலமாயினும நியமமாறுது சிவபூசை செய்" என்பது முதலிய உறுதி வசனஙகளைப போதிக்க வேண்டும இது இஷ்ட லிஙக தீக்ஷையெனவும பெயா பெறும இது தூல சரீரததிலே கனமமல நீக்கத்தின் பொருடடுச் செய்யபபடுவது.

**60**. வினா.—வீர விசேடருக்கு மந்திர தீக்ஷை எவவாறு புரிதல் வேணடுமே?

விடை.—தீவிரமென்னும் சத்திநிபாதத்தையுடைய வீரவிசேடருக்கு விதிப்படி தீக்ஷாமணடபமும அதற்குரிய கிரியைகளுமஇயற்றிக் கலசோதகததால அபிடேகமபுரிநது, கினமலமாக மந்திரங்களினல சிவசுததி புரிவித்துச் சூக்குமதேகத்திலே பிராணலிங்கத்தைப் பிரதிஷ்டைபண்ணி, இந்திரிய வழித்தாகச் செல்லும் கினைவைப் பிராணலிங்க கினைவாய்க காணவும-அவ்விலிங்கத்திற்கும் தனக்கும பேதமறகிற்கவும-உடல பொருள் ஆவி மூனறையும் குரு லிஙக சஙகமங்கட்கே உரியனவாக்கவும-எத்தன்மைய வியாதிகள் அனுகினும் வேறொன்றையும நாடாது உருத்திராக்க பஞசாக்கர விபூதிகளையே மணி மந்திர ஔஷதங்களாகக் கைக்கொள்ளவும உபதேசித்தல்வேணடும. இதுவும முற்கூறிய வீரசாமானியதீக்ஷையும் கிருகஸ்தர்களுக் குரியன. இது பிராணலிங்க தீக்ஷை என

னவும் பெயர்பெறும் இது சூக்கும சரீரத்திலே மா யாமல நீக்கத்தின் பொருட்டுச் செய்யப்படுவது

**61** வினா.—வேததீக்ஷை எவர்க்குரியது?

விடை.—தீவிரதர சத்திநிபாதம் பிறந்து, அர்த்தே ஷணை புத்திரேஷணை தாரேஷணை எனனும் ஈஷணாத் திரயங்களை வெறுத்து, தேகாதி பிரபஞ்சங்களைக் கா னற்சோறெனக் கண்டு அனைத்தையுந் துறந்து, ஞானா சாரியரையடைந்து, அவருடைய திருவடிகளில் பல முறை பணிந்தெழுந்து, கண்ணீர் பெருக நெஞ்சம் நெக்குருக அஞ்சலியஸ்தனாய் நெருப்பிலிட்ட அரக் கெனவுருகி, சுவாமீ! அடியேன் இந்தேகாதிபிரபஞ் சத்திலே கிடந்து எத்தனைகாலம் வருந்துவேன்: இப் போதுதானே சங்கம தீக்ஷையை எனக்குச் செய்ய வேண்டுமென்று பரிதபித்து நிற்கத்தக்க பரிபாகமு டைய வீர நிராபாரருக்கேயுரியது இது பரம சரம சுயம என மூவகைப்பட்டுப் பாவலிங்கதீக்ஷை என வும் பெயர்பெறும் இது காரண சரீரத்திலே ஆணவ மல நீக்கத்தின் பொருட்டுச் செய்யப்படுவது

**62**. வினா —ஆயின் அவற்றுள் பரமமென்பதுயாது?

விடை —அவ்வாறு நிற்கக்கண்ட ஆசாரியர் மா ணாக்கனைக் கிருபையோடு நோக்கி அபயாஸ்தமளித் து நல்ல சுபதினத்திலே முன்புபோலத் தீக்ஷாமண் டபம் முதலியன வகுத்து மேற்கூறிய கிரியாதீக்ஷை மந்திரதீக்ஷை யெனனும் இருவகைத் தீக்ஷாக்கிரியை களையும் செய்வித்து மந்திர விதிப்படி ஆன்மசுத்தி பு ரிந்து, காரண தேகத்திலே உட்புறமில்லாமல் எங் கும் பரிபூரணமாய் விளங்கும் சரலிங்கமாகிய பாவ லிங்கத்தை ஞானஸ்தத்தினால் கொண்டுபோய்த் தா பித்து, அவ்விலிங்கத்துடன் மாணாக்கனது அறிவினை ஏகீ பாவம் பண்ணி அதை அவனுக்குணர்த்தி, பின் னர் அவனறிவு அக்கணமே இந்தேகாதி பிரபஞ்சத் தினது பற்றறச் சிவமேயாய் நிற்கை கண்டு தமது

ஞானதிருஷ்டியினாலே அவவறிவுக்குள்ள அகணடா காரம விளஙகநோக்கி அவனுக்குத தற்போதம நீங கிச் சிவபோகம விளையச் சிவ அபயாஸ்தங் கொடு தது அவனுடைய சாட்குணணியாபி வியக்தியின பொருட்டுத திருவடிகளை அவவறிவாகிய சிரசின் மேல வைதது அநுககிரகிபபதாம

**63** வினா —பின்பு என்னசெய்ய வேணடும?

விடை —நாமே நீ என்னும் மகாவாக்கியபபொருளை உபதேசிதது, இபபிரபஞ்சததுள வாழும உயிர களது ஆணவாதி பாசமாகிய அவலம நீங்குமபொருட்டு தவததிற் கங்கமாகிய காவிவஸ்திரம மரவுரி கந்தை கௌபீனம இவற்றுள் ஒனறைபபுனைநது சடைமுடியேனும முணடிதமேனும மேற்கொணடு இவவுலகததுளளோா அஞஞானம நீஙகும நிமிததம அவரிடும பிச்சையினை மகிழநது உடகொண்டு அநேக ஜனமங்களில ஏறிய பழக்கமும அபிமானமுங கெடபல தலஙகடோறும சஞசரிபபா யெனறு கட்டளையிட்டு, சங்கம பிரசாத பாதோதகங்களால் யாவும சிததியாக வேண்டுதலின் அவற்றின நிலைமையினையும போதித்து ; எஙகும பரிபூரணமாய் விளஙகும சிவத்துடன கலநது பிறிதொனறுந தோன்றாது சிவமாய்நிற்கச் செய்தல வேணடும

**64** வினா.—சரதீக்ஷை என்பது யாது?

விடை.—மேறகூறியபடியே தீக்ஷைபெற்றும் அவவளவு அநுபவ முதிர்ச்சி யிலலாமல எபபோதும சாததுவிககுணம சாநதம தயை ஈதல மெய்மமை கூறுதல நலலொழுக்கம முதலிய ஞானசாரத்தைப் பேணி, அவற்றிற்குரிய அநுஷ்டானததுடன் எங்கும சிவ பாவனையேயாயக் காவி முதலிய முததிரைகளையுந தரித்துககொண்டு தேசங்களிலே சஞசரிப்பது

**65.** வினா.—சுயதீக்ஷை என்பது யாது?

விடை.—மூற் கூறிய பரம் சரங்களின் அநுபவ இலக்கணங்கள் இயலபாக வாராதபடியினுலே அவ்வநுபவத்தை வேண்டிச் சதாசார முதலியவைகளேயும விரதகற்பனைகளாகிய சிலாசார முதலியவைகளேயும நியமமாக அநுஷ்டித்துக்கொண்டு புணணிய தலஙகளிலே சிவபக்தர்கள் கட்டிக்கொடுத்த மடங்களில வாசமாயிருநது இசசைக அநிச்சை பரேச்சையாக வருபவைகளைச் சிவாப்பணம் பண்ணிக்கொண்டு சுயேச்சையாக விருபபதே சுயதீக்ஷையாம.

**66** வினு.—மேற்கூறிய மூவகைத் தீக்ஷையினுல மும்மலம நீஙகுதற்கு அநுபவம எப்படி?

விடை —கான்றசோறுபோல உலகபபற் றெழிதலே ஆணவமல நீக்கததிறகு ஏதுவெனறும, சகல இச்சைகளேயும ஒழிததுக கனமததிற கிடடாகவரும போகங்களே அவன அவள அது எனனும மூன்னிலை நாடாது விருப்பு வெறுபபின்றி அநுபவித்திருத்தலே கன்மமல நீககததிறகு ஏதுவெனறும,குரு லிங்க சங்கமஙகளே பொருளென வழிபடவருதலே மாயாமல நீக்கத்திறகு ஏதுவெனறும் கொள்ளல்வேண்டும்.

**67** வினு.—இனி ஞானமாவது யாது?

விடை.—பர சிவ பநத மெனனும பதிபசுபாச இலக்கணங்களே உணர்த்தும ஞான நூலகளே ஆசிரியரிடததுக் கேட்டுச் சிநதித்துத தெளிந்து நிட்டைகூடலாம.

**68.** வினு.—அங்ஙனமாயின், அப் பதிபசுபாச இலக்கணங்களே அடியேனுக்கு அருளலவேண்டும்!

விடை.—அநாதி மல ரகிதமா யுள்ளது பதி, அதுவே சிவம், அநாதிமல சகிதமா யுள்ளது பசு, அதுவே ஆன்மா, அநாதி யாகவே யுள்ள ஆணவம் காமியம் மாயை என்னும் மூன்றுமே பாசம், அதுவே பிரபஞ்சம்.

**69**. வினா —ஆயின், அப் பதி இலக்கணத்தை வி ளங்க உரைத்தல் வேண்டுமே?

விடை.—அப் பதியாகிய சிவம் சர்வஞ்ஞத்துவம சர்வ கர்த்தத்துவம முதலிய குணங்களை யுடைய ராய் நாமரூபக் கிரியைக ளிலலாதிருந்தும ஆன்மா க்களை ஆட் கொள்ளும நிமித்தம சிறசத்தியோடு கலந்து நாம ரூபங்களை உடையராய்ப பஞ்ச கிரத்தி யங்களை நடத்தா நிற்பா

**70** வினா.—நாமரூபஙகள் என்பன எவை?

விடை.—நிட்களம நிடகளசகளம சகளம என பனவே ரூபம, இவை முறையே அருவம அருவுரு வம உருவம ஆம. அருவத் திருமேனியை யுடைய பொழுது சிவன எனவும, அருவுருவத் திருமேனியை யுடைய பொழுது சதாசிவன எனவும. அங்கம் பிர த்தியாங்கம சாங்கம உபாஙகம எனனும நான்கு உ றுப்புக்க ளமைந்த உருவத் திருமேனியை யுடைய பொழுது மகேஸ்வரன் எனவும பெயராம. அவவங் கங்களின விவரம் எவ்வாறெனில்,—சிரம முகம இத யம என்னும இவை அஙகம, மார்பு கண்டம தனம வாகு நாபி உதரம நேததிரம நாசி கனனம அஸ் தம பாதம தொடை முழந்தாள் பாதாஙகுலி முத லியவை பிரததியாங்கம, சூலம பரசு சுடர் வாள வயிரம பணி பாசாங்குசம மணி அபயம வரதம மு தலியவை சாங்கம, வஸ்திரம ஆபரணம மாலை முத லியவை உபாங்கமாம.

**71**. வினா.—பஞ்சகிர்த்தியங்களாவன யாவை?

விடை.—சிருட்டி திதி சஙகாரம திரோபவம அ நுக்கிரகம் என்பவைகளாம.

**72**. வினா:—சிருட்டி என்பது யாது?

விடை.—இலய போக அதிகாரமூர்த்திகளால்ஆன் மாக்கட்குத் தனு கரண புவன போகங்களை முதற் காரணமாகிய மாயையினின்றும உண்டாக்குதலாம.

**73.** வினா.—திதி என்பது யாது?

விடை.—அங்ஙனம் உண்டானவைகளை அவ்வா ன்மாக்கள் புசிக்கும் காலபரியந்தம் நிறுத்துதலாம்.

**74.** வினா.—சங்காரம் என்பது யாது?

விடை.—அவைகளை மாயையி னிடத்து ஒடுக்கு தலாம்.

**75.** வினா.—திரோபவம் என்பது யாது?

விடை.—அப்போகங்களை இன்பமாக மயக்கி உரு சிப்பித்துப் புசிப்பித்தலாம்.

**76.** வினா.—அநுக்கிரகம் என்பது யாது?

விடை.—அவைகளை ஆன்மாக்களுக்குப் பகுத்த ளித்தலாம்.

**77.** வினா.—தனு கரண புவன போகங்கள் என் பன எவை?

விடை.—தனு சரீரம், கரணம் மனமுதலியகருவி கள்,புவனம் சரீரங்கட்கு ஆதாரமாகிய உலகம், போ கம் அப்புவனங்களில் அநுபவிக்கப்படும் பொருள்.

**78.** வினா.—சிருட்டிக்கு மாயை முதற் காரண மென்று அருளிச்செய்தீரே: அதற்கு இன்னும் வேறு காரணங்களும் உண்டோ?

விடை.—ஒருகாரியத்திற்குக் காரணங்கள் முதற் காரணம் துணைக்காரணம் நிமித்தகாரணம் என மூ ன்றும். குடமாகிய காரியத்திற்கு முதற் காரணம் மண், துணைக்காரணம் தண்டசக்கரம் முதலியவை, நிமித்த காரணம் குயவன். இதுபோலவே சிருட்டிக் கு முதற்காரணம் சுத்தமாயை அசுத்தமாயை பிர கிருதிமாயை என மூன்று, துணைக் காரணம் சிவச த்தி, நிமித்தகாரணம் சிவபெருமான்.

**79.** வினா.—சிவபெருமான் நம்மைப்போலவே உருக் கொண்டுதான் பஞ்ச கிர்த்தியங்களை இயற்று வரோ?

விடை.—சப்த தாதுக்களாலாகிய நம்முடைய உருவம்போலவதன்றி சிவசத்தியாகிய திருவருட் குணங்களுள் இன்ன இன்னவை இன்ன இன்ன அவயவமென்று பாவிக்கப்படும் உருவுடையவராய்த் தன் சந்நிதி மாத்திரத்திலேயே அப்பஞ்ச கிர்த்தியங்களை இயற்றுகிறார்.

**80.** வினு.—சிவசத்தி என்றது யாது?

விடை.—அக்கினியிற் சூடுபோல அபின்னமாயுள்ள வலிமை, அது இலிங்கத்திலே சத்தியென நிற்பதேயன்றி அங்கத்திலே பத்தியெனவும் நிற்கும். [அங்கம்-ஆன்மா] இலிங்கம் தேகியாதலால் அதற்கு நிலைக்களமாகிய ஆன்மாவை அங்கமென்பர்.

**81.** வினு.—பத்தி எத்தனை வகைப்படும்?

விடை.—சமரசபத்தி, ஆனந்தபத்தி, அநுபவபத்தி, அவதானபத்தி, நைஷ்டாபத்தி, சற்பத்தி என அறுவகைப்படும்.

**82.** வினு.—இவைகளில் ஒன்றற்கொன்று தாரதம்மியம் உண்டோ?

விடை.—சமரசபத்தியினது ஆயிரத்தில் ஓரம்சமாயுள்ளது ஆனந்தபத்தி, அதில் ஆயிரத்தில் ஓரம்சமாயுள்ளது அநுபவபத்தி, அதில் ஆயிரத்தில் ஓரம்சமாயுள்ளது அவதானபத்தி, அதில் ஆயிரத்தில் ஓரம்சமாயுள்ளது நைஷ்டாபத்தி, அதில் ஆயிரத்தில் ஓரம்சமாயுள்ளது சற்பத்தி. இவற்றின் நிலைமையைப் பின்னர் உரைப்போம்.

**83.** வினு.—சத்தி எத்தனைவகைப்படும்?

விடை.—பராசத்தி, திரோதானசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என ஐவகைப்பட்டுக் கலையெனவும் பெயர்பெறும்.

**84.** வினு.—இவைகளில் ஒன்றற்கொன்று தாரதம்மியம் உண்டோ?

விடை.—சிவசத்தியில ஆயிரத்தில் ஓரமசமாயுள்ளது பராசத்தி, பராசத்தியில் ஆயிரத்தில ஓரமசமாயுள்ளது திரோதானசத்தி, திரோதானசத்தியில ஆயிரத்தில ஓரமசமாயுள்ளது இச்சாசத்தி, இச்சாசத்தியில ஆயிரத்தில ஓரம்சமாயுள்ளது ஞானசததி, ஞானசததியில ஆயிரத்தில ஓரமசமாயுள்ளது கிரியா சத்தியாம. இவற்றுள பராசததியோடு கூடிப் பராபரனெனறும, திரோதான சத்தியோடு கூடி ஈஸ்வரனென்றும, இச்சாசத்தியோடு கூடி இச்சிதாவெனறும, ஞானசததியோடு கூடி ஞாதாவெனறும, கிரியாசத்தியோடு கூடிக் காததா வெனறும சிவ பெருமான பெயர்பெறுவா. இவவைநது சததிகளிற்றுன பஞசசாதாக்கியந தோனறும.

**85.** வினு.—பஞச சாதாககியங்கள் எவை?

விடை.—சிவசாதாககியம, அமூர்த்திசாதாக்கியம, மூர்ததிசாதாக்கியம, காததுருசாதாககியம, கனமசாதாக்கியம எனபவைகளாம. இவ்வைநதும சதாசிவ ரூபமாம்.

**86.** வினு.—இச் சாதாக்கியங்களினும் தாரதமமியம் உண்டோ?

விடை.—சிற்சததியின் தோற்றமாகிய பராசததியிற் பத்திலொருகூறு வலியினையுடையது சிவசாதாக்கியம, ஆதிசத்தியிற் பத்திலொருகூறு வலியினையுடையது அமூர்த்திசாதாக்கியம, இச்சாசததியிற் பத்திலொருகூறு வலியினையுடையது மூாததிசாதாக்கியம், ஞானசத்தியிற் பத்திலொருகூறு வலியினையுடையது கர்த்துருசாதாக்கியம், கிரியாசத்தியிற் பத்திலொருகூறு வலியினை யுடையது கன்மசாதாக்கியம் என்றறிக.

**87.** வினு.—சிவசாதாக்கியம் எத்தன்மையது?

விடை.—சாந்தியாதீதகலை யென்னும் பெயரையுடைய பராசத்தி சுத்தமாதலால் சுத்தசிவமென்னும்

பெயரையுடையதாய்க் கரணவியாததிக் கெட்டாத அதிசூக்குமமாய் அளவுபடாத பிரகாசமாய் தியான ரூபமாய் விளங்கிச் சாவ வியாபியாயிருப்பது.

**88.** வினா.—அமூர்த்தி சாதாக்கியம எத்தனமையது?

விடை.—சாந்திகலை யென்னும பெயரை யுடைய திரோதானசத்தி அருளையாதலால, வடிவறுதியாய, அமூர்த்திசாதாக்கிய மென்னும பெயரை யுடையதாய், விகற்பமான கலைகளுக கப்பாறபட்டுத தமபாகாரமான ஒப்பற்ற இலிங்கமாய், கோடி சூரியப பிரகாசமா யிருப்பது

**89.** வினா —மூர்த்தி சாதாக்கியம எத்தனமையது?

விடை.—வித்தியாகலை யென்னும பெயரையுடைய இச்சாசத்தியிறறோறறுதலால மூர்த்தியென்னும பெயரோடு காணப்பட்ட வடிவையுடையதாய, காலாக்கினிபோலும பிரகாசத்தினை யுடையதாய, இலிங்கவடிவாய், தனது ஊர்த்தத்திலே ஒரு திருமுகமும் மூன்று கணகளும இரணடு கைகளும உடையதா யிருப்பது

**90** வினா.—கர்த்தரு சாதாக்கியம் எத்தனமையது?

விடை —பிரதிஷ்டாகலை யென்னும் பெயரை யுடைய ஞானசத்தியிற் றோற்றுதலால கர்த்தருவெனனும் பெயரை யுடையதாய், சுத்த படிகப்பிரகாசமான திவ்விய லிங்கமாய், தனது உச்சியில நான்கு திருமுகமும பன்னிரண்டு திருநயனமும எட்டுஅஸ்தங்களும,*இவற்றுள் வலப்புறத்து அஸ்தத்திலே சூலம் மழு வாள் அபயமும, இடப்புறதது அஸ்தத்திலே பாமபு பாசம மணி வரதமும, ஆகிய ஆயுதங்களைத் தரித்துக் குறைவில்லாத இலக்கணங்களுடனே கூடியிருப்பது.

**91.** வினா.—கன்மசாதாக்கியம் எத்தன்மையது?

விடை.—நிவர்த்தி கலையென்னும் பெயரையுடைய கிரியா சத்தியின் றோற்றுகையால கன்மசாதாக்கியமென்னும பெயரையுடையதாய், நாதமயமாகிய ஞானலிங்கமும விந்துமயமாகிய கிரியாபீடமும பஞ்சகிருத்தியமும உடையதாயிருப்பது. இவவைந்தும தத்துவ மெனனப் படும.

**92.** வினா.—இத் தத்துவ மூர்த்திகள் யாவர்?

விடை.—சதாசிவன், ஈசன், பிரமீசன, ஈசுரன், ஈசானன் என்பவர்களாம. மேற் கூறிய சாதாக்கிய தத்துவங்களும இத்தததுவ மூாததிகளும ஒருஙகு கூடியிருபபன பஞ்சமுகங்களாம.

**93.** வினா.—அமமுகஙகள் யாவை?

விடை.—சிவ சாதாக்கிய மெனனும தத்துவத்தையும சதாசிவ மெனனும மூர்த்தியையும பொருந்தியது ஈசானமுகம, அமூர்த்தி சாதாக்கிய மென்னும தத்துவதததையும ஈசனெனனும மூர்த்தியையும பொருந்தியது சத்தியோசாதமுகம, மூர்த்தி சாதாக்கிய மெனனும தத்துவத்தையும பிரமீசனென்னும் மூர்த்தியையும பொருநதியது வாமதேவமுகம, காததுரு சாதாக்கிய மெனனும தததுவததையும் ஈசுரனெனனும மூர்ததியையும பொருந்தியது அகோரமுகம, கனமசாதாககிய மென்னும தத்துவத்தையும ஈசான னென்னும் மூர்த்தியையும பொருந்தியது தற்புருடமுகம். இவை ஐந்தும் பிரபாவ மெனவும பெயர் பெறும.

**94.** வினா.—இம்மூர்த்திகள் எவ்வாறு கூடி யிருப்பார்கள்?

விடை.—உடலும் உயிருமபோலக் கூடி ஒருவரை யொருவர் அந்தர்க்கதமாய் வழிபட்டுகொண்டிருப்பார்கள்.

**95.** வினா.—எவ்வாறு வழிபடுவர்கள்?

விடை.—கன்மசாதாக்கியர் கர்த்துருசாதாக்கிய ரையும், கர்த்துருசாதாக்கியர் மூர்த்திசாதாக்கியரை யும், மூர்த்திசாதாக்கியர் அமூர்த்தி சாதாக்கியரை யும், அமூர்த்தி சாதாக்கியர் சிவசாதாக்கியரையும் வழிபடுவர்கள்.

**96.** வினா.—சாதாக்கியர்கள் ஐவருமே ஆன்மாக் களுக்கு எதிர்நின்று அநுக்கிரகஞ் செய்வரோ?

விடை.—இவர்கள் ஐவரும் ஒருங்குகூடிச் சமஷ் டி ரூபமாயிருக்கும் கன்மசாதாக்கியரே பீடமும் இலிங்கமுமா யிருப்பதன்றியும், ஐந்து திருமுகங்க ளும் பத்து அஸ்தங்களு முடையராய்த் தியானரூ பியுமாய் நின்று அநுக்கிரகிப்பர். [பீடம் - சிவசத்தி இலிங்கம் - சிவம்.]

**97.** வினா.—இலிங்கம் என்பதற்குப் பொருள் என்னை?

விடை.—படைத்தல் காத்தல் முதலியவைகளினா லே உலகத்தைச் சித்திரிப்பது. [லிங்க-சித்திரித்தல்.]

**98.** வினா.—சிற்சத்தியில் சாதாக்கிய தோற்ற மில்லையோ?

விடை.—சாந்தியாதீத கலை யென்னும் பெயரை யுடைய சிற்சத்தியிலே மகா சாதாக்கிய மென்னும் தத்துவத் தோற்றம் உண்டு. ஆனால் அச் சாதாக்கிய மூர்த்தியை யுடைய அதோமுகத்தில் சிவபெருமானுக்கு நித்திரையாதலானும் அம்முகத் திலே பூஜாங்கீகாரமும் அநுக்கிரக நிக்கிரகமும் இல் லையாதலானும் அதனை இங்கே விரிக்கவில்லை.

**99.** வினா.—மேற்சொன்ன ஐந்துசாதாக்கியப் பெயர்களும் இடுகுறியோ காரணமோ?

விடை.—முன் சொன்னவாறே கிரியாசத்தியிற் றோன்றிப் பஞ்சகிர்த்தியமும் பண்ணுகையால் கன்

மசாதாக்கியமென்றும், ஞானசத்தியிற் றோன்றிச் சமூர்த்தன்மையும் உடைமையால் காத்துருசாதாக்கியமென்றும், இச்சாசத்தியிற் றோன்றித் தமபாகிருதியாயிருக்கின்ற இலிங்க ரூபமாய் ஒரு திருமுகம் உடைமையால் மூர்த்திசாதாக்கியமென்றும், திரோதான சத்தியிற்றோன்றி அருவமாயிருத்தலால் அமூர்த்திசாதாக்கியமென்றும், பராசத்தியிற் றோன்றிப் பேரொளிப் பிழம்பாய்ப் பரமானந்த சொரூபமாயிருக்கையால் சிவசாதாக்கியமென்றும் சொல்லப்படுதலின் காரணப் பெயர்களேயாம். இதல்லாமலும் கன்மசாதாக்கியருக்கு ஆசாரலிங்கமென்றும், காத்துருசாதாக்கியருக்குக் குருலிங்கமென்றும், மூர்த்திசாதாக்கியருக்குச் சிவலிங்கமென்றும், அமூர்த்திசாதாக்கியருக்குச் சங்கமலிங்கமென்றும், சிவசாதாக்கியருக்குப் பிரசாதலிங்கமென்றும், மகாசாதாக்கியருக்கு மகாலிங்கமென்றும் பெயருண்டு.

**100.** வினா.—ஆயின மற்றை மூர்த்திகள் எங்கே உற்பவிப்பர்?

விடை.—கன்மசாதாக்கியரிடத்திலேயே மயேஸ்வரமூர்த்தியும் இருபத்தைந்து மூர்த்திகளும் உற்பவமாவர்.

**101.** வினா.—இருபத்தைந்து மூர்த்திகள்யாவர்?

விடை.—சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூடர், சபாபதி, கலியாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், ஹரியர்த்தர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், கஜமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசினர், தக்ஷிணாமூர்த்தி, இலிங்கோற்பவர் என்பவர்களாம்.

**102.** வினா.—இனி முற்கூறிய பத்தியில் [illegible] தோற்றங்கள் உண்டோ?

விடை,—சுசித்தம், சுபுத்தி, நிராங்காரம், சுமனம், சுஞ்ஞானம், சற்பாவம என ஆறு அஸ்தங்கள் உண்டாம,

**103** வினா,—இவைகளும் காரணப பெயர்களோ?

விடை,—பிரபஞ்சமாகிய மாயா பதார்த்தங்களைச் சிந்தியாமல சிவனையே சிந்திததலால சுசித்தமென்றும, மாயாபதார்த்தங்களை நிச்சயம பண்ணுது சிவனையே நிசசயமபண்ணுகையால சுபுததியென்றும, பிரபஞ்ச பதாரததஙகளை அபிமானியாமல சிவனிடத்தே அபிமானம பண்ணுகையால் நிராங்காரமெனறும், கணடவறறையெல்லாம பறறுமல் சிவனையே பற்றுகையால சுமன மெனறும, ஏகதேசமற்று வியாபக மாகையால சுஞ்ஞான மெனறும, உண்மையாதலால சற்பாவ மெனறும வழஙகுதலின காரணப பெயாகளே.

**104**. வினா.—பத்தியின் வியாபாரம என்னை?

விடை.—இருவினை யொபபு மலபரிபாகம பிறநத ஆன்மாக்கள் ஞானசாரியனை யடைநது ஞானதீக்ஷையைபபெற்று ஞானசாததிரஙகளைக் கேட்டுச் சிநதித்துத் தெளிநது நிட்டைபண்ணுங் காலத்து, ஆன்மபோதம சற்றும சேவியாமல சிவத்துடன் ஏகிபாவமாய் ஞாதுரு ஞான ஞேயமெனனும திரிபுடியும தோன்றுமல் நிற்கின்ற அநத நின்மல துரியாதீத நிட்டையை விட்டுப் பிரியாமல சிவானநதாநுபூதியைத் திளைத்திருக்கப் பணணுவதுதான்.

**105**. வினா.—சத்தியின் வியாபாரம என்னை

விடை.—ஆணவமலத்திஞலே மறைபட்டு ஒன்றுந் தோன்றுமல் கேவலமாகக் கிடக்கும் ஆன்மாக்களை இச்சாஞானக் கிரியைகளைக் கலையாதி தத்துவங்களிஞல் விளக்கி, மாயாதேக போக சமபி

தினால மலபரிபாகம் வரச்செய்து, பின்பு சிவபெரு மான ஒருவா உண்டென்று தோன்றச் செய்து, சரியாபாதம கிரியாபாதம யோகபாதம ஞானபாதங்களைக் கிரமமாக வருவித்து, இடைவிடாமற சிவனை வழிபடச் செய்விப்பதாம. இவ்வாறு செய்விக்கையால வரும சத்தி நிபாதத்தையுடைய ஆனமாக்கட்கே பத்தி உபகரிக்கும்.

**106** வினு.—இன்னுமஅச்சத்திஎன்னசெய்யும?

விடை.—ஆனமாக்களை மயக்கும பொலலாததாகியஆணவமலததுக்குப பரிபாகததினைவரச்செய்யும.

**107**. வினு.—உயிாகட்குப பத்தி சத்தி என்னுமிரணடும எவவாறு கூறபபடும?

விடை.—பத்தி அநதரங்கமென்றும, சத்தி பகிரங்கமெனறும கூறபபடும.

**108**. வினு.—சிவபிரானுக்கும தூல சூக்கும காரணம எனனும திருமேனிகள் உளவோ?

விடை.—மேற்சொன்ன மூபபததொரு மூர்த்திகளில இலிங்கோறபவா முதலிய இருபத்தைந்து மூாத்திகளும சிவபிரானுக்குத தூலரூபமாகவும, சாதாககியமூாததிகள் அறுவரும சூககுமரூபமாகவும, சததிகள அறுவருமகாரணரூபமாகவும கற்பிப்பதுணடு.

**109**. வினு.—சிருட்டி எத்தனை வகைபபடும?

விடை.—சங்கற்பசிருட்டி, விகற்பசிருட்டி என இருவகையாம.

**110**. வினு.—சங்கற்ப சிருட்டி என்பது யாது?

விடை.—நினைவுமாத்திரமாச் செய்கை : அது சிவசிருட்டி, சத்திசிருட்டி, சாதாக்கிய சிருட்டி என மூன்று பிரிவா யிருக்கும்.

**111**. வினு.—விகற்பசிருட்டி என்பது யாது?

விடை.—பிரமா விஷ்ணு உருத்திரன் மயேசுரன் சதாசிவன் ஆகிய அதிகாரம பெற்ற அனுபக்ஷ அதிகார கர்த்தர்களாற் செய்யும் சிருட்டியாம் மனவாக்குக்காயங்களாற் செய்கையால இதற்கு விகற்பச்சிருட்டி எனப்பெயராயிற்று.

**112.** வினா.—ஆன்மாக்களாவார் யாவர்?

விடை.—நித்தியமாய், வியாபகமாய், சேதனமாய், பாசத்தடை யுடையோராய், சாரூதத்தின் வண்ணமாய, சரீரந்தோறும் வெவ்வேறாய், வினைகளைச் செய்து வினைப்பயன்களை அநுபவிப்போராய், சிறறறிவும சிறுதொழிலும உடையோராய், தமக்கு ஒருதலைவனை உடையவராய் இருப்பவர்.

**113.** வினா.—இவ்வான்மாக்கள் எத்தனை வகைபபடுவார்?

விடை.—விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படுவர்.

**114.** வினா.—இம மூவர்களுடைய இலக்கணம என்னை?

விடை.—விசேஷ ஞானத்தினுலும் சங்கியாசத்தினுலும தீக்ஷையிலே நிவர்த்தி பிரதிஷ்டை வித்தை என்னுமமூன்றுகலைகள் சோதிக்கப்பட்டு,மாயாகாரியமாகிய தூல சூக்கும காரண தேகங்களையும் அத்தேகாதிஷ்டமாகிய கன்மங்களையும் நீங்கி, ஆணவமலம் ஒன்றினுலே மறைப்புண்டு, சுத்த வித்தைக்குக கீழ் அசுத்தமாயைக்குமேல் இருக்குமவர்கள் விஞ்ஞானகலர். பிரளயகாலத்திலே கலை நீங்குகையால்தீக்ஷயினுலே நிவர்த்தி பிரதிஷ்டை என்னும இரண்டுகலைகள் சோதிக்கப்பட்டதனுல் தாம் பிரளயாகலரென்று பெயர்பெற்று, ஆணவம் கன்மம் என்னும் இருமலத்தினராய், பிரகிருதிக்கு மேல் அசுத்தமாயாபுவனத்திலே மாயைவசப்படாமல மாயையைத் த

வசப்படுத்தி வசிப்பவர்கள் பிரளயாகலர் மூன்றும மலபந்திகளாய் சிருட்டிகாலத்தில கலையாதிகளுடன கூடி பிரகிருதிக்குக் கீழுள்ள புவனங்களில நாலவகைத தோற்றம எழுவகைப பிறவிகளினும சுழலும வர்கள சகலர்.

**115** வினா—இவ்வான்மாக்கட்கு வேறுபெயர்களும உண்டோ?

விடை.—ஆணவமலம ஒன்றினல் இச்சா ஞானக் கிரியைகள மறைபட்டு அறிவும செயலும போகமும குறிமுதலியனவும அற்று மலம தானயிருக்கும ஆனமாவுக்குக கேவலனென்றும விகலனென்றும பெயர். அக்கேவலக கிடையை விட்டுத் தூல சூக்கும காரணமாகிய மாயாதேகததைப பெற்றுச் சுகதுக்க போகங்களை அநுபவித்துக்கொண்டு புண்ணியபாவங்களை ஆரச்சித்திருக்கும ஆனமாவுக்குச் சகலனென்றும பெத்தனென்றுமபெயர். கேவல சகலங்களை நீங்கிச சிவாநுக்கிரகத்தினலே சுத்தாவத்தையைப பெற்றிருக்கும ஆனமாவுக்கு நினமலனென்றும ஆதிமுத்தனென்றும பெயர் உண்டு.

**116.** வினா.—மேற்சொன்ன மூவருக்கும தாரகம எவை?

விடை.—கேவலனுக்கு மலம தாரகம, சகலனுக்கு மாயை தாரகம, சுத்தனுக்கு அருளே தாரகம.

**117.** வினா.—கேவலாவத்தை எத்தன்மைய்து?

விடை.—ஆதித்தனை இராகு வந்து மறைத்தகாலத்தில அவனுடைய பிரகாச சத்திகள ஒன்றுந் தோன்றது எப்படி மறைபடுமோ அப்படி, ஆணவமலம மறைக்க ஆனமாவினது இச்சா ஞானக கிரியைகள மறைபட்டு யாதொரு வியாபாரமும அற்றுக் கிடப்பது.

**118.** வினா.—சகலாவத்தை எத்தன்மையது?

விடை.—அவ்வானமா பரிபக்குவ முற்று ஆதிக

தனை மேகமானது வந்து மறைததபோது, நெய்யி னை உருக்கவும சேற்றினை இறுகசசெயயவும உஷ் ணசததி தோன்றுமல பிரகாசசத்தி மாததிரம சி றிது விளஙகுவது போல, கனமததுக கீடாக வநது பொருநதிய மாயாகாரியமாகிய பௌதிக தூல சரீ ரத்தில, சிவசத்தி பிரேரகத்தினால அசுதத மாயாகா ரியமான கலை விததை ராகம முதலிய தத்துவஙகள அவவான்மாவினது இச்சா ஞானக் கிரியைகளி ன வியாபாரததைத் தடுக்கின்ற மலசததி யினது வியாபாரததை அவவிடத்துச் சிறிது நீகக, அப போது இது நிததியம இது அநிததியம எனனும வஸ்து விவேகத்தையும பூத பௌஷிய வாததமான ஙகளையும பிரிதது அறியும ஞானந தோன்றும விருந துகொணடு தனக்கு அமைத்த போக்கிய பதாரத் தஙகளை வஸ்து ரூபமாக அறியாமல மோக ரூப மாயத தததுவஙகள தானாகினை றறிவது.

**119.** வினா.—சுத்தாவத்தை எத்தனமையது?

விடை.—இங்஡னம சகலாவததையைப பறறிச சனன மரணததை யுற்றுச சுகதுககமாகிய கனம போகங்களை அநுபவிதது வருஙகாலததில இருவி னையொபபு மலபரிபாகம வரும அக்காலததில சிவ பெருமானே தாமே ஞானாசாரியனா அதிஷ்டிதது பொலலாத ஆணவமலத்தைத தீக்ஷையினால போகக அப்போது அவவானமா தறபோதம நீஙகி நினம லானநத பரசிவ சொரூபத்தை அநநியமாயக்கலநது அச்சொரூபமேயாய் நிறபது.

**120.** வினா.—ஆனமாவிற்குப பொது வியலபா வது யாது?

விடை.—தனனை விட்டு நீங்காது அநநியமா யி ருக்கும சிவபெருமானையும அறியாது மலத்தினால மறைபட்டுத் தனனையும மறந்து, இவவுலகத்திலவந து பிறந்தும் இறநதும இருவினைக் கீடாகிய சுகதுகக

போகஙகளை அநுபவித்துக் கொணடு திரிவதாம.

**121**. வினா.—அவ்வானமா விற்குச சிறபபியல் பாவது யாது?

விடை.—இங்ஙனம சகலாவத்தையைப் பற்றிச சனன மரணபபடுங காலதது மாயாதேக போக சப பநததத்தினால இருவினை யொபபும மலபரி பாகமும வர, அபபொழுது சததிநிபாதம உண்டாம. அச்சத திநிபாதம உணடாகவே மெய்மமையாகிய பததி வநது பதியும, அபபததி பதிநது இவன அறிவும தானும ஒன்றுபடுங காலம உயிரகருயிராயப பிரியாமலும இவனுககு விளஙகாமலும நிததியமாய்ப பூரணமாய நினற சிவம பிரிநது தோனற அசசிவமே தானாய்ச சிவானநதாநு பூதியைத் திளைத்திருபபதாம.

**122**. வினா.—இவவித ஆனமாக்கட்குச் சிவபெருமான் எவவாறு நினறு அருள்புரிவர்?

விடை.—முனசொனன அணுபட்ச பிரமாதி சதாசிவாநதமான மூாததிகளில இலய போக அதிகாரத் தையுடைய பசுபதியாகிய சிவபெருமான சிருஷ்டி காலததில ஒரு மலமுடைய விஞ்ஞானகலரிற் பக்கு வருக்கு நிராதாரமாக அறிவுககறிவாய் நினறு சாம பவ தீக்ஷையைப பண்ணி அவவாணவ மலததைப போக்கி முததி யோக்கியரை முததியிலே விடுவர். முததி யோககிய ரலலாதவாகளை அதிகாரமலாநு குணமாகச சுதத மாயையிலே தனு கரண புவன போகங்களை உண்டாக்கிச் சுதத போகபநதமாகக் கொடுத்துச சுதத வித்தை முதலிய தானஙகளில வைத்து அச்சுதத போகத்திலே வைராககியம வரும பொருட்டுப பிரேரிபபா. இவர்களுக்கு அபர முத்தாக ளென்று பெயா, பின்னும அச்சுத்த சிவன மயேசுர புவனத்திலிருககும அனநதேசுா மூாததியை அதிஷ்டிதது அசுதத மாயையை ஒரு பிரதேசத்திற கலக்கித தனு கரண புவன போகஙகளை உண்

டாகிய பிரளயாகலருக்குப் பாதமாகக் கொடுத்து பிரகிருதிக்கு மேலுள்ள போகங்களில் வெறுப்புவரும் பொருட்டுச் சனன மரணங்களை யுண்டாக்குவா. பின்னும் அனந்தேசுரர் மூலமாக உருத்திர மூர்த்தியை அதிஷ்டித்து பிரகிருதியைக் கலக்கித் தனு கரண புவன போகங்களை உண்டாக்கிச் சகலருக்குப் பாதமாகக் கொடுத்து சுக துக்கங்களை அநுபவிக்கச் செய்வா.

**123.** வினா.—ஆணவ மலத்தினது இலக்கணம் என்னை?

விடை.—செம்பிற் களிம்புபோல ஆன்மாக்களில் அநாதியே உடன்கலந்து நிற்பதாய், தான் ஒன்றும் ஆன்மாக்கள் பலவும் ஆகையால் அப் பற்பல ஆன்மாக்களுடைய அறிவையும் தொழிலையும் மறைக்கும் பற்பல விசித்திர சத்திகளை யுடையதாய்ச் சடமாயிருப்பது.

**124.** வினா.—ஒருவனை மறைத்த சத்தியே மற்றொருவனை மறையாதோ?

விடை —அங்ஙனம் மறைக்குமாயின் ஒருவனுக்கு மலசத்தி பரிபாகப்பட்டு நீங்குங்காலத்தில் சர்வான்மாக்களுக்கும் நீங்கி மோக்ஷம் வர வேண்டும். அப்படி சர்வான்மாக்களுக்கும் ஏககாலத்தில் மோக்ஷம் இன்மையால், ஒருவனை மறைத்தசத்தி மற்றொருவனை மறையாதென்பதே நிச்சயம் இது ஆன்மாக்களுக்குச் சகலாவத்தையில் அராக முதலிய கருவிகளுடன் கூடி நின்று அறிவித்து மோகமுதலிய அறுவகைக் குணத்தினையுஞ் செய்விக்கும்.

**125.** வினா.—மோக முதலிய வற்றின் நிலைமை என்னை?

விடை.—சிவத்திரவிய அபகார முதலியவை அதிபாதக மென்று ஆசாரியரால் அறிந்தாலும் அவ

வுணர்ச்சி சிறிதும் விளங்காமல் அறிவை மயக்கி அறியாத காரியைச் செய்விப்பது மோகம்: யாதா மொருவன் தான் மோகித்துப் புணராத பொதும டந்தையைப் பார்த்து இவள் தெய்வமடந்தை இவ ளினும் அரியபேறு எனக்கில்லை யென்று மதிக்கச் செய்வது மதம்: அவளைப் பெறாத போது மிகவும் வருந்தித் தேடிச்செல்ல வாஞ்சையை விளைவிப்ப து ஆராகம்: சுற்றத்தை விட்டு எப்படி நீங்குவோம் நாம் இறந்தால் இதை எவர் தாங்குவர் என்கின்ற மனோ துக்கத்தினாலே உடல் உலருமபடி செய்விப் பது சோஷம். சிவம் நமக்குள்ள இருவினைப் பலன் களை ஆதிதெய்விகம் முதலிய மூவிதத்தால் தரும் என்னும் உணர்வை இழப்பித்து இவன் என்னைக் கெடுத்தான், இவன் என்னை எடுத்தான், நானும் எ ன்னை வணங்கினர் வாழ்வித்தேன்,என நினைப்பிப் பது வைசித்திரியம். புத்திர மித்திராதிகளைக் கண் டு களித்து இனி நமக்கொன்றும் குறைவில்லை என மகிழ்விப்பது அரிஷம். இவை ஆணவமல சத்திகளி ன் காரியம் எனப்படும்.

**126.** வினு.—கன்ம மலத்தினது இலக்கண மெ ன்னை?

விடை.—மாறுபாடில்லாமல் தனது வியாபகத் தினாலே ஆணவமலத்திற்குப் பரிபாகத்தை வருவிப் பதாய், ஒன்றற்கொன்று மாறுபாடா யிருக்கும் சுகத் தினையுந் துக்கத்தினையுந் தருவதாய், நலவினை யென் றும் தீவினை யென்றும் இருவகைப்பட்டு மாயையி னின்றுந் தனு கரண புவன போகங்கள் உண்டாதற் குக் காரணமாய், ஆன்மாக்களுக்கு இருவினை யொப் பு வந்தகாலத்தில் நீங்குவதாய் நிற்பது இது எடுத்த ஜனனத்திலே இயற்றுங்கால ஆகாமியம் எனவும், ஜனனங்கடோறும் ஈட்டப்பட்டுப் பக்குவப்படாது நிற்குங்கால சஞ்சிதமெனவும், இச்சஞ்சித கன்மங்க ளுள்ளே பக்குவப்பட்டவை உடம்பையும் அதனால

அநுபவிக்கும் இன்பதுன்பங்களையும் உபகரிக்குங் கால பிராரத்தமெனவும் பெயர்பெறும்.

**127.** வினா.—சுத்த மாயையினது இலக்கணம் என்னை?

விடை.—முற்கூறிய சத்தி மூர்த்திகளாகிய சாதாக்கியங்களால் அவ்வப் புவனவாசிகளுக்குத் தக்க தனுவாதிகளையும் சரியைகிரியை யோகங்களில் நின்றோர்க்குச் சாலோகாதி பதமுத்திகளையும் உண்டாக்குவது. இதற்கு வயிந்தவம் மாயை சிவம் விந்து என்பன பலபெயர் உண்டு.

**128.** வினா.—அசுத்த மாயையினது இலக்கணம் என்னை?

விடை.—நித்தியமாகி அநாதியாயிருக்கும் உயிர்கட்கு அவ்வுயிர்களாற் செய்யப்பட்ட வினைக்கீடாக வந்து பொருந்தும் தனு கரண புவன போகமாகிய நான்கும் வெவ்வேறு யுண்டாதற்கு இடமாகி அவ்வான்மாக்கள் இருவினையொப்பு மலபரிபாகம் பிறந்து முத்தியை யடையுமளவும் பொய்யைமெய்யாகக் கருதும்படி மயக்குவதாயும், அவ்வுயிர்கள் முத்தி அடையுங்காலத்துத் தனது காரியமாகிய தனு கரண புவன போகம் முதலியயாவும் தோன்றுமல நீங்கிப் போவதாயும், ஈசுரதத்துவத்தி லிருக்கும் மகேசுரர் என்னும் அனந்தேசுரர் வசப்பட்டு அவர்க்குப் பரிக்கிரக சத்தியாயு மிருப்பது.

**129.** வினா.—மாயை ஒன்றென்று சிலர் கூறுகின்றார்களே, தேவரீர் இரண்டென்றற தென்னை?

விடை.—சுத்த மாயை போதம், அசுத்த மாயை மோகம், ஆகையால் இரண்டெனப்தே துணிவு. இவ்விரண்டும் நித்தியமே. இவ்விரண்டேயன்றி அசுத்த மாயையிற் றோன்றிப் பிரகிருதிமாயை எனவும் ஒன்றுண்டு, இதுவே அநித்தியம்.

**130.** வினா.—ஆயின பஞசமலஙகளெனறு வழஙகுவதெனனை?

விடை.—மேறகூறிய ஆணவமகனமம மாயை என்னும மூனறோடு மாயேயம திரோதானம எனனும இரணடையுஙகூட்டி ஐநதென வழஙகுவர்.

**131.** வினா.—மாயேயம எனபன யாவை?

விடை.—மாயையால உணடாகிய தததுவஙகளும அவைகளாலாகிய தனு கரண புவன போகஙகளுமாம

**132** வினா —திரோதான மென்பது யாது?

விடை —சுததசிவததினது சிறசததி பராசததி வழிததாகிய ஆதிசததிதானே திரோதான சததியெனனும பெயருடையதாய, நிததியமாயிருககு மூயினை அநாதியே பறறி உபாதியினைச் செயயும பொலலாத ஆணவமலமாகிய வியாதியைப போககுதறகுரிய ஔஷதமாகிய வினைபபோகஙகளைப புசிபபிதது உணமையாகிய பரிபாகததை வரசசெயயும. இது மலததைச செலுததுகையால மலமென உபசரிககபபட்டது.

**133** வினா —சுத்தமாயையி னின்றும தோனறுவன யாவை?

விடை.—அமமாயையினினறும சிவபிரேரகததால முனனா சபதரூபமாகிய சிவதததுவமும, சிவ தததுவததில சததிதததுவமும, சததிதததுவததில சாதாககியதத்துவமும, சாதாககியதததுவததில ஈசுரதததுவமும, ஈசுரதத்துவததில சுததவித்தியாததுவமும தோனறும: இவ்வைநதும சிவதததுவமெனப பெயாபெறும. பினனா-அகாராதி க்ஷகாராந்தமாகிய அக்ஷரம ஐமபததொன்றும், ஈசானமுதல அஸ்திரம ஈறாக மநதிரம் பதினொன்றும, பிரணவமுதல நமோ நமாந்தமாகப் பத மந்திரம எணபத

தோன்றும், நமஃ சுதா சுவாகா வஷடு வவுஷடு உம படு என்னும் வர்க்கத்துக்கு ஒரு கோடியாகச் சப்தகோடி மகாமந்திரங்களும், காலாக்கினி உருத்திர புவன முதல அனுசிருத புவனாந்தமாகவுள்ள புவனங்கள் இருநூற்றிருபத்து நான்கும், ஆகிய இவைகளும் தோன்றும்.

**134.** வின.—அசுத்தமாயையினின்றும் தோன்றுவன யாவை?

விடை —கிருத்திய கர்த்தாவாகிய அனந்தேசுரமூர்த்தியினுடைய கிரியாசத்தியினால் அசுத்தமாயையின் ஓர் பிரதேசத்தினின்றும் காலமும் நியதியும் கலையும் ஒருகொத்தா யுண்டாகும். அக்கலையினின்றும் வித்தையும், வித்தையினின்றும் இராகமும் தோன்றும். இங்ஙனம் கூறிய இவ்வைந்தும் ஆன்மாவுக்கு ஓர் சட்டையாகும். நெய் திரி நெருப்பு இம்மூன்றுங் கூடினவிடத்து ஓர்பிரகாசம் உண்டாவதுபோலவும், மஞ்சள் சுண்ணம் இவ்விரண்டும் கூடினவிடத்து ஓர் செந்நிறம் உண்டாவது போலவும், இவ்வைந்துங் கூடினவிடத்துப் புருடதத்துவந் தோன்றும்: இவற்றோடு மாயையைக் கலக்கிய பிரதேசமாயையும் ஒருங்குசேர இவ்வேழும் வித்தியாதத்துவமெனப் பெயர்பெறும்.

**135.** வின.—ஏனைத் தத்துவங்கள் எவ்வாறு தோன்றும்?

விடை.—கலாதத்துவத்தில் பிரகிருதிதத்துவமும் அதினின்றும் முக்குணமுந் தோன்றும். அம்முக்குணமும் ஒத்தவிடமே அவ்வியக்தம், அதுவே சித்தம். அந்த அவ்வியக்தத்தில் புத்தியும், புத்தியில் அகங்காரமும் தோன்றும். அவ்வகங்காரம் தைசதாங்காரம், வைகரியாங்காரம், பூதாதியாங்காரம், என மூவிதப்படும் சாத்துவிக குணத்தினையுடைய அத்தைசதவாங்காரத்தில் மனமும், ஞானேந்திரியமாகிய

சுரோத்திராதிகளைந்தும் தோன்றும். இராசதகுண த்தினையுடைய வைகரியாங்காரத்தில் கன்மேந்தி ரியமாகிய வாக்காதிகள் ஐந்தும் தோன்றும். தாம தகுணத்தினையுடைய பூதாதியாங்காரத்தில் சத்த ப ரிச ரூப ரச கந்தமெனனும் தன்மாத்திரைகளைந்தும் தோன்றும் அத்தன்மாத்திரைகளுள்ளே சத்தத்தில் ஆகாயமும், பரிசத்தில் வாயுவும்,ரூபத்தில் தேயுவும், ரசத்தில் அப்புவும், கந்தத்தில் பிருதிவியும் தோன் றும் இவைகள் வியக்தி ரூபமாகத் தோற்றுவதே சி ருஷ்டியெனவும், முன்தோன்றிய முறையே சத்திரூ பமாக ஒடுங்குவதே சங்காரமெனவும் கூறப்படும் [ வியக்தி-காணப்படுவது ]

**136** வினா—ஆன்மா எப்பொழுதும் ஒரு தன் மையாகவே யிருக்குமோ?

விடை —சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரி யம், துரியாதீதம்,என்னும் ஐந்தவஸ்தைகளாலும் மா றிமாறி வேறுபட்டே யிருக்கும்.

**137** வினா.—ஆயின்-அப்பஞ்சா வஸ்தைகளில் எவ்வாறு வேறுபட்டு நின்று அநுபவிக்கும்?

விடை.—சாக்கிராவஸ்தையில் நெற்றியிலே சுரோ த்திராதிஐந்தும், வாக்காதிஐந்தும், சத்தாதி ஐந்து , வசனாதிஐந்தும், பிராணாதி பத்தும், மனமாதி நான்கு ம், ஆகிய முப்பத்துநான்கு தத்துவங்களுடனும் தா னும் ஒருவனாகக்கூடிச்சகலவிடயங்களையும்;சொப்ப னவஸ்தையில் கண்டத்திலேசத்தாதிகளும்,வசனாதி களும், வாயுக்களும், அந்தக்கரணங்களும்,ஆகிய இரு பத்துநான்கு தத்துவங்களுடனும் தானும் ஒருவ னாகக்கூடி வியவகாரிக விடய போக வாசனையுடன் அக்காலத்தில் உண்டாகும் தோற்றங்களையும்;சுழுத் தியவஸ்தையில் இதயத்திலே சித்தம், பிராணவாயு, என்னும் இரண்டுடனே தானும் ஒருவனாகக்கூடித் தேகபோக ஒழிவையும்; துரியாவஸ்தையில் நாபியி

லே பிராணவாயு ஒன்றுடனே தானும கூடியும, துரியாதீத அவஸ்தையில மூலத்திலே மூலமாகிய ஆணவமலததுடனே தனிததிருநதும சுகதுக்கஙக ளை அநுபவிக்கும.

**138** விஞ —ஆன்மா ஒரே வகையாகததான் பி றநதுழலுமோ?

விடை —அபபடி யனறு, நாலவகைத தோற்றம எழுவகைபபிறபபு எணபததுநானகுலக்ஷம யோனி பேதம எனனும இவறறுள ஒவ்வொனறிலும மாறி மாறி அநேகமுறை பிறககும. பிறக்குஙகால புணணி யகனமததுக கீடாக பூதசார மெனனுஞ சரீரத்தை எடுத்துச சுவாககததிலும, பாவகனமததுக் கீடாக பூதசரீரததை எடுதது நரகஙகளிலும, மிசிரகனமத துக கீடாக பூதபரிணும சரீரததை எடுததுப பூமியி லும சுகதுக்கங்களை அநுபவிந துழலும

**139**. விஞ —அபபடியா: நாலவகைத தோறற மாவன எவை?

விடை.—அண்டசம சுவேதசம உற்பிச்சம சரா யுசம என்பவையாம. இவற்றுள முட்டையிற பிறப பன அணடசம, வியர்வையிற பிறபபன சுவேதசம, பூமியைப்பிளநதுகொணடு விதது வோ கிழஙகு முத லியவைகளிற் பிறபபன உறபிசசம, கருபபாசயப பையிற பிறபபன சராயுசம, எனறு சொலலபபடும.

**140** விஞ.—எழுவகைப் பிறவிகள் எவை?

விடை.—தாவரம ஊர்வன நீர்வாழ்வன பறவை விலஙகு தேவா மனிதர் எனனும இவைகளே

**141**. விஞ —எணபத்துநான்கு லக்ஷம யோனி பேதங்கள் எவை?

விடை.—முன்சொன்ன விருக்ஷமுதலிய தாவர வாக்கத்தில பத்தொன்பதுலக்ஷம, ஊர்வனவாககத தில பதினோந்துலக்ஷம, நீர்வாழுவன வாககத்தில பத

துலக்ஷம, பறவை வாக்கத்தில பத்துலக்ஷம, விலங்கு வாககததில பத்துலக்ஷம, தேவ வாக்கததில பதினொருலக்ஷம, மானிட வாககததில ஒனபதுலக்ஷம, எனனும இவைகளேயாம.

**142.** வினா—இவ்வாறு பிறந்துழலும சீவனைச சிவன எவ்வாறு ஆட்கொள்கின்றனா?

விடை—அநந்த யோனிகளில அனநதம பிறவி எடுக்கசசெயது முடிவில மானுடயோனியிற சனிப்பித்து, அதிலும பிரமம க்ஷத்திரிய வைசிய சூததிரா எனனும உயாநத வருணஙகளிற பிறநது அவற்றிற்குரிய ஆசாரங்களை அநுஷ்டிததுப பரிபாக மேலிடசசெயவிததுப, முன்னா உலகாயதம பௌததம ஆருகம மீமாஞசம பாஞசராததிரம மாயாவாதமஎனனும புறசசமயஙகளினும-பினனா சைவம பாசுபதம மகாவிரதம காளாமுகம வாமம வைரவம எனனும உட்சமயங்களினும கிரமமாகப புகுவித்து, அவவவற்றிற்குளள மூாததிகளை அவற்றிறகுரிய சாதனஙகளால வழிபடப புரிவிததுப, அதன்பினனா சிததாநத சைவததுட் புகுநது சமய விசேஷ தீக்ஷைகளைபபெறறுச் சரியை கிரியை யோகஙகளை அநுஷ்டிக்கும பொருட்டு அச் சிவபிரான தமது காருணியததினால அதற்கேறற தனுவாதிகளைக கூட்டி அததனுவாதிகளைக் கொண்டு சரியாதிகளை அநுஷ்டிக்கச் செய்து, இறுதியிலே வீரசைவ சமயததுட் புகுவித்துப் பிண்டததல முடையனாக்கிச் சததி நிபாதம உதிப்பிததுத் தமது தீக்ஷாசததியினால ஆட்கொள்ளுவா. [சததி-சிறசததி-நிபாதம-பதிதல.]

**143** வினா.—பிண்டததலமாவது யாது?

விடை—அநேக ஜனனங்களிலே செய்துள்ள புணணியமேலீட்டினாலே உணமை விளங்க அநதக்கரணசுத்தியுடையனாதல இது ஆனமவிவேகம உயிரவிளக்கம எனவும பெயாபெறும.

**144** வினு—சத்தி நிபாததத்தின இலக்கண மென்னே?

விடை.—தா னென்னுஞ் சுட்டற விதேகமுத்தி சாடசாதகாரத்தைப பெறவேணடு மென்கிற வாஞ்சை மேனமேலும உத்தரோத்தரமாய் அடங்காமலெழுதலும, தேகாதிபிரபஞசங்களைக் கானறசோறென அருவருத்துச் சிவாகமே பித்தாய மேவிடுதலும, சுத்த சிவசொரூபமே யாகும குருலிங்கசங்கமம என சறறுஞ் சலனமின்றி நினைத்தற கரிய அப்பொருளுடன ஏகீபாவமாகச செயகினற சமரசபத்தி சத்திய உருவமாகவந்து பதிதலும, ஜனனமரணத்திற கேதுவாகிய புத்திரமித்திர களத்திராதிகளான சமுசாரததைக்கணடு இந்தசசமுசாரத்தில விழுந்து அழுந்தவோ என்று இலச்சைபபட்டழிதலும, வாயின்ற சமுசாரமென்று சொலலவும அருவருத்தலும, மனத்தின கணணே சமுசாரமென்று நினைக்கும்பொழுது அதனுலவரும பயததினுல பிராணவாயு இயங்காமல மூர்ச்சித்து அயாசசியினே யடைதலும, பிறவுமாகிய நிலைமைகளோடு சீவன முத்தர்களை யடைந்து அவர்களை வழிபடுதல முதலிய உத்தமகுணஙகளைப பெறுதலாம

**145.** வினு.—அச சததிநிபாதம எத்தனை வகைபபடும?

விடை.—மந்ததரம, மந்தம, தீவிரம, தீவிரதரம, என நானகு வகைபபடும இவறறை யுடையவாகட்குச் செயயும தீக்ஷை முறையே வாழைத்தணடில அககினிபறறுதலையும, பசசைவிறகில அககினிபறறுதலையும, உலாநதவிறகில அககினிபறறுதலையும, கரியில அககினிபறறுதலையும ஒபபாம

**146.** வினு—ஆயின அச் சத்தி நிபாதாக்கு அநுககிரகஞ் செயயும முறைமை எஙஙனம?

விடை.—தீவிரதரம தீவிரம எனனும சத்திநிபா

த்தை யுடைய விஞ்ஞானகலர்க்கும பிரளயாக லாகரும தேகமின்மையால் சிவபெருமான நிராதாரமாக எழுந்தருளி விஞ்ஞானகலாகரு அறிவுக்கறிவாக நின்று ஆணவமலததினையும், பிரளயாகலாகரு இடபவாகனரூடராய் எழுந்தருளி ஆணவ மலத தோடு கனமமலத்தினையும், மநதம மநததரம என னும சத்திநிபாததநினை யுடைய சகலாகரு மானைக் காட்டி மானபிடிக்கு மாறுபோல அவாகளைப்போலவே சாதாரமாக மானுடச்சட்டை சாத்தி எழுந தருளி ஆணவம கனமம மாயை என்னும மும்மலங் களையும போக்கி அநுகக்கிரகிப்பா.

**147.** வின.—மேலேதீக்ஷாசததியென்றது யாது?

விடை.—மாணுக்கனைப பற்றிய மும மலங்களை யும நீககிச் சிவசொரூபம ஆக்குமபடி சற்குருவினது அறிவையும், அவரை வழிபட்டு தீக்ஷையினல மும மலஙகளையும ஒழித்துச சிவானந்தாநுபூதியைப பெ றுமபொருட்டு மாணுக்கனது அறிவையும், காகததி னது இருகண்களினிடததும ஒரு மணியேநின்று அ றிவதுபோல் நின்று செலுத்தும சததியாம.

**148.** வின.—ஆசிரியா சிவலிங்கதாரணம் எத னபொருட்டுச் செயவா?

விடை.—பசுவிறகு வரும வியாதியை நிவர்த திக்கும மருநது பசுவின் பாலென அறிநதவன் அப்ப சுவினிடத்துண்டாகிய பாலைக்கறந்து காய்ச்சி அப பசுவிற்கு ஊட்டுவதுபோல,ஆசாரியா மாணுக்கனது ஆணவமலமென்னும வியாதியை நீக்கி இலிஙகரூப மாக்குவது சிவ மென் றறிந்தா ராகலின அச்சிவத் தையே சிவலிங்கமாக்கித் தரிப்பரென்றறிக.

**149.** வின.—இச்சிவலிங்க தாரணத்தாற் பெற பபடும பேறு யாது?

விடை.—ஏனைச் சுருதிகளாற பெறப்படும் சாலோ

காதி சதேகமுத்திகளுக் கதீதமாகிய விதேகமுத்தி யேயாம.

**150**. வினா.—சிவலிங்கதாரணத்திற்கும் விதேக முத்திக்கும ஒற்றுமை எபபடி?

விடை.—தததொமசி மகா வாக்கியார்த்தப்படி தீக்ஷாபலத்தினால இலிங்காங்க சையோகியாகி நிறற லின், சிவலிங்கதாரண முடையவாக்கே விதேகமுத்தி யுரித்தாம.

**151** வினா —தீக்ஷையினாலேயே விதேகமுத்தி சித்திபபதாயின் மேற கூறிய தீக்ஷையின கூறுபாடடையும கருணைகூாந்து விரித்தருளல வேண்டும.

விடை.—அன்பனே! நீ வினவியது நன்று, இதுமுக கியமாக உணரறபாலதாகிய விஷயமே, முறகூறிய மூவகைத்தீக்ஷையும விரிககுஙகால தனிததனி ஏழு வகைபபடும.

**152**. வினா.—ஆயின் கிரியா தீக்ஷையின பிரிவுக ள் எவை?

விடை.—ஆக்கினாதீக்ஷை, உவமாதீக்ஷை, சுவஸ் திகாரோகணதீக்ஷை, கலசாபிஷேகதீக்ஷை, விபூதிப பட்டதீக்ஷை, இலிங்காயிதத தீக்ஷை, இலிங்கசுவா யித்ததீக்ஷை எனபனவாம.

**153**. வினா.—ஆக்கினாதீக்ஷை எனபது என்னை?

விடை —ஆசாரியர் மாணாக்க னுடைய அறிவு தாம விதித்த விதியினைக் கடவாமலும, விகற்பத்தினைச் செய்யும் பஞ்சேந்திரிய அந்தக்கரண வழிச செல்லாமலும், தமமுன் யானென்னும மறுமாற்றஞ சொல்லாமலு மிருக்க; ஆக்கினாசத்தியை நிறுத்தித் தமது ஆக்கினைப்படி செய்விப்பது.

**154**. வினா.—உவமாதீக்ஷை என்பது என்னை?

விடை.—ஆசாரியா மாணாக்கனிடத்துச் சமயாசார சத்தியைததாபித்து, இச்சமயத்தில முன்னோர்களான வசவாதி கணங்கள் குருலிங்க சங்கமங்களினிடத்திலே வழிபட்ட திறததினையும அஷ்டாபரண பஞ்சாசார விததத்தினையும அறிவிததுச சமயாசார முறைமையிலே நிறுத்துவது.

**155.** வினா—சுவஸ்திகாரோகண தீக்ஷை என்பது என்னை?

விடை.—நிறைந்த அந்தகாரததினால மறைபட்டுத் தோனறாத ஆகாயம சூரியோதயமான வுடனே அவவந்தகாரம நீஙகித தோனறுமாறுபோல, ஆசாரியரும் மாணாககனைச சுவஸ்திகாசனத்தில இருத்தி நிவிர்ததி முதலிய பஞ்சகலைகளில வியாபித்திருக்கும மநதிர பத வனன புவன தததுவஙகளிற கட்டுண்டிருக்கும கனமஙகளைப்போககி அவவத்துவாக்களைச் சுத்திபண்ணவே அவனது அறிவு விளங்கும. அதனபொருட்டு அவனது உடலை மநதிரசொரூபமாக்க, மநதிரஙகளினால நியாசம பணணுவது.

**156.** வினா.—கலசாபிஷேக தீக்ஷை எனபது என்னை?

விடை.—ஆசாரியர் முன்னரே மாணாக்கனுடைய மாயாதேகததைச் சுவஸ்தி காரோகண தீக்ஷையினால மநதிரதேகமாகச செய்து, பின்னாச் சிவ லிஙகத்தைத தரிககத் தபனகலசமாகிய சிவகும்ப ஜலத்தை யெடுத்து மாணாக்கன் சிவரூப மாமாறு பாவித்துச் சிரசின்மீது அபிஷேகஞ் செய்வது

**157.** வினா.—விபூதிப்பட்ட தீக்ஷை என்பது என்னை?

விடை.—முற்கூறிய சுவஸ்தி காரோகண தீக்ஷையில ஆசாரியர் மாணாக்கனது தூல சூக்கும காரண தேகங்களையும அதற்தகாதாரமாகிய புவனஙகளை

யும அத்தேக பிரேரகமாகிய மந்திர பத முதலியவற்றையும சோதித்து, அத்துவாக்களிற் கட்டுப்பட்டிருக்கும கன்மங்களையும போக்கி, "இனிமேல் கனமபந்தம ஏறுதபடி இருவகை மாயாகன்ம பந்தங்களையும போக்கிவிட்டோ மாகையால நீ மாயையாகிய சததுருவைச் செயித்தாய்"என்று தமது திருக்கரத்தாலே திருவருள் பிரகாசிக்கக் கடவதென மாணாக்கன நெற்றியில திருவெண்ணீறறைத் தரிப்பது.

**158** வினா.—இலிங்காயித்த தீக்ஷை என்பது என்னை?

விடை.—இவ்வுலகத்தில காமுகனொருவன் சௌந்தரியமுடையவளாயத தருணியாயிருக்கும ஓர்கன்னிகையைக்கண்டு, அவளிடத்து அதிமோகத்தையடைந்து தனவசமழிந்து, தன்னால அவளை வசபபடுத்திக் கூடுதறகு முடியாமையால மானத்தைவிடுத்து, பனைமடலால ஒருகுதிரையைச்செய்து அக்குதிரையின்மே லேறிக்கொண்டு, அவளைபபோல ஒருபடத்திலெழுதிக கையிலேந்திச் சென்று, அவள் ஊரினையும பெயரினையும உரைத்து அரசனிருக்கும நகரில அக்குதிரையை நடத்துங்கால; அந்த நகரத்தரசன அவனது காமககுறியைக் கண்டு,அக்கன்னிகையை அழைப்பித்து, அவளுக்கு வேணடுவன கொடுத்து, அக்காமுகன வசமாக்குமாறு போல: பரிபாகத்தையுடைய மாணாக்கனும சிவபெருமானால தரும பேரின்பத்தினைப பரோக்ஷ ஞானமா யறிந்து, பின்பு அபரோக்ஷமாக அச்சுகத்தினை அநுபவிக்க வேண்டி, தேகாதி பிரபஞ்சத்தினைக் கைவிட்டு, சிவதாக மேலிட்டு, கண்ணீருங் கம்பலையுமாகக் கதறிக்கொண்டு,நாணத்தினை விடுத்து,அன்புமேற்கொண்டு, சிவாகமங்களைக் கைவிடாது ஆசாரியனைத் தேடி வருங்காலத்தில் ; அவ்வாசாரியரும தமது சொரூபமாகிய ஓர் சிவலிங்கத்தை ஆகமவிதிப்படி பூசித்து, உயர்வொப் பிலலாத அவ்விஷ்ட லிங்கத்தை அக்கி

ணியை அக்கினிதேவன் எடுத்ததுபோலக் கையிலெ டுத்து, தமது அங்கையில் வைத்து, அமமாணாக்கனை களிகூர அவனுக்குத் தரிசனஞ் செய்விப்பது

**159.** வினா.—இலிங்க சுவாயித்த தீக்ஷை என்பது என்னை?

விடை —கொல்லன் இருப்புப் பாளத்தை உலையில் நெருப்பெழுக காய்ச்சி ஒரு பாத்திரத்தி லுள்ள ஜலத்திலே அதைத் தோய்க்க அந்த ஜலத்தை அப்பாளம் தனக்குள் சுவறப் பண்ணிக்கொள்ளு மாறு போல, ஆசாரியரும் மாணாக்கனுக்குச் சிவலிங்கத்தை அவனது தற்போதத்தை விழுங்கிச் சிவபோத்தைத் தருமபொருட்டு அவனுடைய தூலாங்கத்தில் உத்தமாங்கமான சிரசு முதலிய தானங்களில தாரணம் பணணுவது. இது சற்குரு சாயித்தியம எனவும பெயர்பெறும

**160** வினா —மந்திரதீக்ஷைப்பிரிவுகளெவை?

விடை —சமயதீக்ஷை, நிர்ச்சமசாரதீக்ஷை, நிஷ்பிராணதீக்ஷை, தத்துவதீக்ஷை, அத்யாத்மிகதீக்ஷை, அநுக்கிரகதீக்ஷை, சத்திய சுத்த வித்யாதீக்ஷை என்பனவாம்.

**161** வினா.—சமயதீக்ஷை என்பது என்னை?

விடை —பதினெட்டு ஜாதிபேதங்களையுங் களைந்து சங்கமகுலமாக்கி வைப்பது.

**162.** வினா.—நிர்ச்சம்சார தீக்ஷை என்பது என்னை?

விடை.—தனு கரண புவனபோக சமசாரம அநித்தியமென விடுவித்துச் சிவபூசையே சமசாரமாகக் கொள்விப்பது.

**163.** வினா —நிஷ்பிராண தீக்ஷை என்பது என்னை?

விடை.—மண் பெண் பொன் எனனும மூவாசைகளினும மனம செலலாமல பற்றறுத்தல்.

**164** வின—தத்துவ தீக்ஷை எனபது என்னை?

விடை.—முப்பத்தாறு தத்துவங்களையும் பிரகிருதியையும இலிங்கமயமாகத தெளிவிப்பது

**165** வின.—அத்யாத்மிகதீக்ஷை எனபது என்னை?

விடை —சுயமபுலிஙக சொரூபமே நீ, பயப்படாதே, உணர்ந்தறிவாய்: எனவிளககுவது

**166** வின —அநுக்கிரகதீக்ஷை என்பது என்னை?

விடை —சிவபெருமான் தானே ஆறு லிஙகமாயும ஆறஙகமாயு மிருக்குமென றுணாததுவது

**167.** வின.—சததிய சுதத விதயாதீக்ஷை என்பது என்னை?

விடை —சச்சிதானநத பிரமமே இலிஙகாஙகசையோகமாய் இருககினறதெனறு விளஙக உணாததுவது

**168** வின.—வேததீக்ஷையின பிரிவுகள் எவை?

விடை.—ஏகாக்கிரதீக்ஷை, திடவிரததீக்ஷை, பஞசேநதிரியாரப்பணதீக்ஷை, அஷ்டமலாதீக்ஷை, இலிங்கநிசதீக்ஷை, மனோலயதீக்ஷை, சத்தியோன்முததிதீக்ஷை எனபனவாம.

**169.** வின.—ஏகாக்கிரதீக்ஷை என்பதுஎன்னை?

விடை.—தனது கரத்திலுள்ள இஷ்ட லிங்கமே தெய்வ மென்று வேறு தெய்வம ஒன்றையும் நாடாமலிருப்பது.

**170**. திடவிரததீக்ஷை என்பது என்னை?

விடை.—தான் இவவாறு மேற்கொணட விரதநியமங்களைச் சரீரபரியந்தம விடாம லிருப்பது.

**171.** வின.—பஞ்சேந்திரியார்ப்பணதீக்ஷை என்பது என்னை?

விடை.—சிவலிங்கமேபதி தானேசதியாக எண்ணி, நிஜகாய கரண பாவங்களால சாககிர சொபபன சுழுத்திகளில சாவகாலமுமவந்த விடயங்களை இஷ்ட பிராண பாவலிஙகஙகளுககு அாப்பிபபது

**172.** வினா —அஹிம்ஸா தீக்ஷை எனபது என்னை?

விடை —அபராதஞ்செயயாத சீவனகளையும மற்ற சீவனகளையும கொலலாதிருபபது.

**173** வினா —இலிஙகக்கிச தீக்ஷை என்பது என்னை?

விடை —ஆதிமதயாநத ரகிதமாகிய சிவனை தானென றறிவது

**174.** வினா.—மனோலய தீக்ஷை எனபதுஎன்னை?

விடை.—சமாதியாய அநத இலிஙகததில பாவனை லயிதது மனம திருமபாம லிருபபது

**175** வினா.—சததியோனமுததி தீக்ஷை எனபது என்னை?

விடை.—பாவனை யொழிநது அநத இலிஙகமும தானும அத்துவிதமாய இரணடறக கலநது ஐககியமாவது. இஙஙனம கூறிய இருபததொரு தீக்ஷைகளும ஆன்மாவை ஞானமயமாககலால சினமய தீக்ஷை எனப பெயாபெறறு, ஆசிரியரால உணாத்தப படுவனவும இயறறப படுவனவும மாணாககரால அநுஷ்டிக்கப் படுவனவுமா யிருக்கும.

**176.** வினா —அற்றேல, இவ்வாறு தீக்ஷிததுச் சிவலிஙகதாரணஞ செய்யபபெறற ஆனமா எவவாறும்?

விடை.—நலல சாப்பமானது ஒருவனைக் கடிநத அநதக்ஷணமே அவனது உட லுயிர் இரணடும அவ்விஷமய மானவாறு போலவும, ஒரு கடததிற் சலத்தைபபூரித்து அடுபபிலேற்றி விறகில தீக்கொளுவி

எரிக்க அச்சூடு அக்கடத்தினையும அக்கடத்திற் பூரி ததிருநத சலததினையுங் கலநது தறசொரூபமாகச் செயயுமாறு போலவும, ஆசாரியா மாணுககனது உடலில தமது சொரூபமாகிய இஷ்டலிஙகததைத தரிககவே, அவனுடைய தேகததினது உளளும புறமபும அததேகததைப பற்றிய சிவனும சிவசொரூபமாம

**177** வினா.—மேறகூறிய தீக்ஷைகள யாவருககும பலிக்குமோ?

விடை.—ஐபபசித்திஙகளில ஆதித்தவாரத்தில சுவாதி நக்ஷத்திரஙகூடிய சுபதினததில மேகம நீரைச சொரிவதறிநது சமுததிரததில வாழும சிபபிகளெலலாம அசசலத்தில மிதநது வாயைத திறநதுகொணடிருநது அமமழைததுளியை அருநதிக் கருக்கொணடு முத்துககளை ஈனுவதனறி, கடலுள்வாழும மறற ஜீவராசிகள் உணடதனாற் பிரயோசன மிலலாதது போல; நமக கெப்போது அததுவிதானநத முத்தி கிடைக்குமெனறு சிவராகங கொணடு வாயவிட்டலறி வருந்திய பிரபஞசததையும போகங்களையும வெறுததுக் கைவிட விருமபும அறிவுடையனாகிய சறசீடனுக்கு ஞானாசாரியன் தீக்ஷையினைப பண்ணி, பின்பு ஞானகக்கிரியா அபிவியக்த பரபபிரமசசொரூபமே தானாக விளஙகும சிவலிங்கத்தைத் தரிக்கவே, அச் சிவசொரூபம கிடைககும. அவ வாறு சையற்ற அபக்குவாகளுககு அத்தீக்ஷையாற பிரயோசனம இலலையென்றறிக.

**178.** தீக்ஷை எனனும சொல்லுக்குப் பொருள் என்னை?

விடை.—ஒன்றைக் கெடுத்து ஒன்றைக் கொடுத்தல எனப பொருள்படுதலால் நெலலுக்குத் தவிடு உமி முளையைப்போல அநாதி சையோகமா யிருக்கும ஆணவாதி மலத்திரயங்களைப் போக்கி, ஒரு

1327(6521)



போதும நீஙகாததாகிய சிவத்துவ அபிவியகதியைக் கொடுத்தல எனபதாம. [தீ-ஞானததைக் கொடுத தல. க்ஷா-பாசத்தைக் கெடுததல.]

**179** வின.—இவவாறு தீக்ஷைபெற்ற வீரசை வா சிவலிஙகததை எவ்வாறு வழிபடுவா?

விடை.—முறகூறிய சற்பதது முதலிய அறுவ கைப பததிகளிலும வழுவாமல நினறு வழிபடுவா

**180** வின.—சறபத்தி முதலியவறறின் இலகக ணஙகளேயும அடியேனுக்கு உணாத்தல வேண்டும:

விடை.—அபபடியே அபபததிகளின இலககண ஙகளேயும அவறறிற்குரிய அவஸதைகளேயும தனித தனி உணாததுவோம கேடபாயாக.

**181**. வின.—சற்பத்தியையும அதனது அவஸ் தையையும் அருளலவேணடும·

விடை —சிறசததியே தனது அறிவுக் கறிவாய் விளஙகிகொணடு தனக்கு வடிவமாயிருககும என பதை யுணாநது, அசசிறசததியை யனறி யானே அ றிவேனெனனும மமதை தோனறு துணாதலுவது சறபதது இசசறபததியையும அசசிறசததியையும தனககு வடிவமெனறு நின்ற நிடடையே நிலை சாககிரம.

**182**. வின.—நைடடா பததியையும அதனது அவஸதையையும அருளலவேணடும:

விடை.—அச் சிறசதது எனக்கு வடிவமன்று, எனது அறிவை விளககுவதாயப பகுபபறறிருககும அவவறிவாலே யான் அறிவதலலது யானுக ஒனறை யும அறியமாடடேன; எனனும நிச்சயததினே அறி விததுககொண டிருபபது நைடடாபதது: இவவநு பவமே நினமல சொபபனம.

**183**. வின.—அவதான பத்தியையும அதனது அவஸதையையும அருளலவேண்டும:

விடை —சிற்சத்தி அறிவிக்க யாம அறிகின்றோம் எனனும் பகுபபுமினறிப பிரிவறறுநிறகும அநுபவ ததை விளககுவது அவதானபதது. இவவநுபவமே நினமலசுழுததி

**184** வினா.—அநுபவபததியையும அதனது அ வஸதையையும அருளலவேண்டும:

விடை.—சிறசததியும தன் அறிவும இரண்டலல வெனனும சுட்டுமறறு, அச்சிற்சததி தானாய் நிறகும அநுபவததை விளக்குவது அநுபவபதது. இவவநு பவமே நினமலதுரியம,

**185**. வினா.—ஆனநதபததியையும அதனது அ வஸதையையும அருளல வேண்டும:

விடை.—சிற்சததி பேரறிவு பெருநதொழி லெல லா முடையதாகையால அதனையுங குறியாது, அ தனுளமூழ்தும அநுபவத்தை விளக்குவது ஆனநத பததி இவ்வநுபவமே நினமல துரியாதீதம.

**186**. வினா.—சமரசபத்தியையும அதனது அவ ஸதை முதலிய வற்றையும அருளல வேணடும.

விடை.—இதயங் தொடங்கித துவாதசாநத மாகி ய உன்மனி கலைபரியநதம நினமல சாககிரமுதல நினமல துரியாதீதமாம. இமமட்டுமே நிட்டை. இங ஙனம நிட்டைகூடி நிறகுமளவில உன்மனாநதம பரா வததை, அவறறினை விளக்குவதுதான சமரசபததி, அவவிடத்து நினமலானநத அகண்டாகார பாசிவ சாட்சாத்காரமாம அச்சிவ சாட்சாத காரத்தைப பெறுவதே ஆனமலாபமாகிய சீவன் முததி.

**187**.—இச்சீவன் முத்தாகள் பாசிவததோ டெ வவாறு கலபபா?

விடை.—அவாஙமன கோசரமாகிய பரசிவத்தோ டொனறாய்க் கலநது வியாபியாய் அத்து விதமே யாகி, (நீரோடு நீர சேர்நது ஒன்றாய்ப போவதும

இருளும ஒளியும போல இரண்டாகி நிறபது மல லாமல) தேனும அதனது உருசியும எங்ஙனம பிரி யாதிருக்குமோ அஙஙனம சிவநதோடு அததுவித மாகக கலநது நிற்பா இதுவே பாமுததி.

**188** வினு.—சிவபெருமான அபபாமுததியில எவவாறு சோத்துக்கொளளுவா?

விடை.—செமபினிடத்து இரதகுளிகைகொடுக்க அகதுளிகை அச்செமபினிடததுளள காளிததகதை யெலலாம போககி மீணடும அது அசசெமபிலூ றிப பரவககொடாமல வேதித்து அசசெமபினிடத து ஒனறுயககலநது அதனைப பொனனுககிந தா னும அபபொனனைவிடடு நீஙகாது நிறகுமாறுபோ ல, சிவபெருமானும தமது நிறசததியால ஆனமாவி னது ஆணவாதி மலஙகளை யெலலாம போககி மீண டும ஆவை அவவானமாவினது ஞானசததியை ஆவ ரியாதபடி அசசததி வியக்தி ரூபமாய் அவவானம நிறசததியிற கலநது நினறு அததுவிதமாகச் சோத துக்கொளளுவா [ஆவரிததல-மறைததல ]

**189**. வினு.—சீவன முத்தாகள பாமுததியடை யுமளவும எவவாறு பிராபதத கனமததை அநுபவி ததலவேணடும்?

விடை —சீவனமுத்தன் தனது சரீரம வெநதவ ஸ்திரம போலத் தோறற மாததிரமா யிருநதுகொ ணடு இதறகு முனனா பெத்தாவஸ்தையிலே இந திரியமுகமாய்ப புசிதத பழக்கமாற, கந்தமுதலிய திரவியங்களை ஆசாராதி அறுவகை இலிஙகங்களுக கும அாபபிததுப பிரசாதபோகமாய்ப புசித்தல்வே ணடும.

**190** வினு.—அபபடியாயின அாபபிக்கும முறை மையையும அதற்குரிய காமாதிகளையும விளஙக அடியேனுக்கு உணாததியருளல வேணடும்;

விடை —அனபனே! இவறறை யெலலாம நின் னைபபோன்ற பரிபக்குவாகளுக் குணாததாது வே று யாவாகருணாத்துவோம : ஙனகு கேடபாயாக. பிருதிவியாகிய அஙகத்தினிடமாக, சுசித்தமாகிய அஸ்தத்தால், கிரியாசததியிறறோறறிய கனமசாதா கதிய வடிவமாய, நாசியில் எழுந்தருளி யிருக்கும ஆசாரலிஙகததிறகு, நிவிாத்திகலையிற றோறறிய கநத விடயததை, சத்தியோசாத முகமாகச சறபததி யால அாபபிததுப பிரசாதமாகக கொளளுமவனே பததன

அப்புவாகிய அங்கத்தினிடமாக, சுபுததியாகிய அஸதததால, ஞானசத்தியிற் றோறறிய காத்துரு சாதாககிய வடிவாய, சிஙஙுவையில எழுநதருளி யிருககும குரு லிங்கததிற்கு, பிரதிஷ்டா கலையிற றோறறிய இரத விடயததை, வாமதேவ முகமாக நைஷடாபத்தியால ஆாபபிததுப பிரசாதமாகக்கொ ளளுமவனே மயேசுரன

தேயுவாகிய அங்கத்தினிடமாக, நிராஙகார அஸ் தததால, இசசா சத்தியிற் றோற்றிய மூாத்திசாதா கதிய வடிவமாய, நேக்திரத்தில எழுநதருளி யிருக கும சிவலிஙகத்திறகு, விததியாகலையிற் றோற்றிய உருவ விடயத்தை, அகோர முகமாக அவதான பததியால ஆாப்பிததுப பிரசாதமாகக் கொள்ளும வனே பிரசாதி

வாயுவாகிய அஙகத்தி னிடமாக, சுமனமாகிய அ ஸ்தத்தால, ஆதிசத்தியிற் றோற்றிய அமூாததிசா தாக்கிய வடிவமாய், தொக்கில எழுநதருளி யிரு க்கும சரலிங்கத்திற்கு, சாநதிகலையிற்றோற்றிய பரி சவிடயத்தை, தறபுருடமுகமாக அநுபவபத்தியா ல அா்பபித்துப் பிரசாதமாகக் கொள்ளுமவனே பி ராணலிங்கி.

ஆகாயமாகிய அங்கத்தினிடமாக, சுஞானமாகிய அஸ்தத்தால, பராசத்தியிற்றோற்றிய சிவசாதாக்கிய வடிவமாய, சுரோத்திரத்தில எழுந்தருளியிருக்கும பிரசாதலிங்கத்திற்கு, சாந்தியாதீத கலையிற் றோற்றிய சத்தவிடயத்தை, ஈசானமுகமாக ஆனந்தபத்தியால அர்ப்பித்துப பிரசாதமாகக் கொள்ளுமவனே சரணன்

சீவனாகிய அங்கத்தினிடமாக, சற்பாவமாகிய அஸ்தத்தால், சிற்சத்தியிற் றோற்றிய மகாசாதாக்கிய வடிவமாய், இருதயத்தில எழுந்தருளியிருக்கும மகாலிங்கத்திற்கு, சாந்தியாதீதோத்தரகலையிற் றோற்றிய பரிணாமமெனனும விடயத்தை, பாவனாமுகமாகச சமரசபத்தியால அர்ப்பித்துப பிரசாதமாகக கொள்ளுமவனே ஐக்யன

இங்ஙனம கூறிய ஆசாராதி அறுவகை இலிங்கங்களும முறையே, மூலாதாரம சுவாதிஷ்டானம மணிபூரகம அனாகதம விசுத்தி ஆக்கினை எனனும ஆறாதாரங்களையும பற்றி நிற்கும எனவும; பத்தன முதல ஐக்யன ஈறாகிய அறுவரும முறையே, பிரமன விஷ்ணு உருத்திரன மகேசுரன சதாசிவன உமாபதி எனப பரியாயநாமம பெறுவா எனவும கூறுவதும உண்டு

**191** வினா.—சிவபெருமான மேறகூறிய விடயபபிரயோசனங்களை ஒருதன்மைத்தாக நின்று அங்கீகரியாமற பலதிறப படுவானேனன?

விடை.—ஒவவொரு பதார்த்தங்களும ரூபம உருசி திருபதி என மூவகைபபடுதலால சிவபெருமான தூலதேகத்தில இஷ்டலிங்கமாய நின்று ரூபத்தையும, சூக்குமதேகத்தில பிராணலிங்கமாய நின்று உருசியையும, காரணதேகத்தில பாவலிங்கமாய் நின்று திருபதியையும அங்கீகரித்தருளுவா. இவவாறு அங்கீகரிக்குங்கால இஷ்டலிங்கமே ஆசாரலிங்கம குருலிங்கமெனவும், பிராணலிங்கமே சிவலிங்கம சங்கம

லிங்கமெனவும, பாவலிங்கமே பிரசாதலிங்கம மஹா லிங்கமெனவும பிரிவுபட்டு நவலிங்கங்களாம.

**192** வினா.—இலிங்கம ஒனபது வகைப்படு மேல, ஆன்மாவாகிய அங்கமும அதற்கியைய ஒன பதுவகைபபடுமோ?

விடை.—இஷ்ட பிராண பாவலிங்கமாய் நிற்குங கால முறையே, தியாகாங்கம போகாஙகம யோகாங கம எனத தூல சூக்கும காரணமாய மூவகைபபட் டும, அம மூலிங்கமும அறுவகைப படுமபொழுது தியாகாங்கமே பத்தாஙகம மகேஸ்வராஙகம எனவும, போகாஙகமே பிரசாதாஙகம பிராண லிங்காஙகம எனவும, யோகாஙகமே சரணாஙகம ஐக்கியாங்கம எனவும அறுவகைபபட்டும; அஙகமும ஒனபது வ கையாம

**193.** வினா.—இத்தனமைய சிவன்முததா அநு பவம எததனமையது?

விடை.—அவாகள யாதொனறினைச் செயயு மிட த்தும அதன்வசப்படாமல அதிற்றோயாமல தாமது நிலைதவறாமல அயராமல,(எழுக்கமபிமேல எழிசசெ னறு காலகட்டி யாடுகின்றவன பிறரறிய எத்தனை விநோதமசெயயினும அவனநினைவு அக்காலினகண் ணே நிற்குமாறுபோல) அவாகளறிவு அச்சிவததை விட்டுப பிரியாததனமையால அவாகள ஒனறை நினை பபினும அது நினைவன்று - நினையாநினைவு. தூஙகி னும அது தூக்கமன்று - தூஙகாத்தூக்கம. துணியி னும் அது துணிவனறு - துணியாத்துணிவு. அறியி னும அது அறிவன்று - அறியாவறிவு என்று அவா கள் நடையைச சிவாகமஙகள விசேடித்துச் சொ லலும

**194** வினா —ஆசாரலிங்கம் எபபொழுது தரிப் பது?

விடை.—தேகமுதலிய அநித்தியப் பொருள்களை மெய்யெனக் கருதும மனைபிராந்தி முதலியவற்றை

யும கொலை களவு கள் காமம பரஙிநதைமுதலிய பாத கஙகளையும முற்றும விடடது அவைகட்கு மிகபபயங தவனுகி வநதடைநத மாணுககனுககு, எபபோதும ஞானப பிரகாசததைதத தரும விபூதி உருததிராக்ஷ பஞசாக்ஷரஙகளும குரு லிஙக சஙகமஙகளும கிருபா சொரூபமாகிய பாதோதகமும பிரசாதமும ஆகிய அஷ்டாபரணஙகளையும சதாசார முதலிய ஆசாரங்களையும விடடு நீஙகாமல அறிவுபறறி கிறகுமபடி சறபத்தியானது விளககி கிறக, அதனுல விளஙகி கிறகும அறிவினகண்ணே சுசிதத வஸததில தரிபபது

**195.** வினு—குருலிஙகம எபபொழுது தரிபபது?

விடை.—ஒருவன சதாசார முதலியவறறின நிலைதவறின விடததும, அக்குறறததைக் கிருபையினுலே போக்கும சதாசார முதலியவறறின சொரூபமாகிய குரு லிஙக சஙகமததை வேறெருவன நிநதிதத வாாததையினைக காதிஞலே கேட்டவிடத்தும, அத தோஷ நிரத தனனுடைய சரீரததைவிடடு அதைதத தீரததுக கொளவதாகிய நிலைபெறற வைராககிய பததியை, முன் பெறதாவஸ்தையில தன் பிதா மாதாககள முதலிய பெயாகளை ஒருவன நிநதிதத விடததுத தனக கெபபடி அபிமானம உணடாகியதோ அபபடி அபிமானிககப பணணும நைஷ்டா பததி அதிஷடானமான சுபுததி யஸததில தரிபபது

**196.** வினு.—சிவலிஙகம எபபொழுது தரிப்பது?

விடை.—பெதத காலததுத தன தேகததுளள இநதிரிய அநதககரண முதலியவறறின வியாபாரஙகள் அபேதமாய் நடநதது போல, தன் சரீரமெல்லாம இலிஙக வி[illegible] படியே சகசமாகச் சாககிரம சொப[illegible] துரியம துரியாதீத முதலிய அவஸ்தை[illegible] இநதிரிய வி

யாபாரங்கள் வந்து தாக்காமல் சற்றும் சந்தேகமில்லாமல் நிறைகப்பண்ணும் அவதானபத்தியினாலே, வீரசைவாசார நிலைமைபற்றிய அறிவிலே நிராங்கார அஸ்தத்தில் தரிப்பது.

**197.** வினா.—சங்கமலிங்கம் எப்பொழுது தரிப்பது?

விடை.—தனக்கு முற்கூறிய இலிங்கமே உருவமாய்ச் சிற்சத்தியே தானாய் நின்றுவிளங்கும் விளக்கம் வழுவாது தற்போதம் சுட்டாது நிறைகப் பண்ணும் அநுபவபத்தி யதிஷ்டானமாகிய சுமனமென்னும் அஸ்தத்தில் தரிப்பது.

**198.** வினா.—பிரசாதலிங்கம் எப்பொழுது தரிப்பது?

விடை.—இலிங்கத்தை உயிராகவும் அறிவை உடலாகவும் உடையதாய நிகழும் அநுபவத்தை விளக்குகின்ற ஆனந்தபத்தி யதிஷ்டானமாகிய சுஞ்ஞானமென்னும் அஸ்தத்தில் தரிப்பது.

**199.** வினா.—மகாலிங்கம் எப்பொழுது தரிப்பது?

விடை.—சச்சிதானந்த நித்திய பரிபூரண சிவத்துக்கும் சீவனுக்கும் அநுபவத்தில் நிறீது பேதங்கண்டு அபேதந் தோன்றாமல் அவ்விரண்டையும் ஒன்றாகச் சமரசப்படுத்தும் சமரசபத்தியினாலே, சகல பற்றுக்களையும் அகற்றிச் சிவாநுபவத்தை விளைவித்து ஆன்மபோத வியாபாரத்தை அறச்செய்து கொண்டிருக்கும் சற்பாவ அஸ்தத்திலே தரிப்பது.

**200.** வினா.—இச் சடுத்தல லிங்க விரதத்திற்கு மேற்பட்டது உண்டோ?

விடை.—இல்லை. ஏனெனில் - உள்ளும் புறம்பும் நீக்க மற்றுச் சர்வ வியாபியா யிருக்கும் சுத்த சிவமே சடுத்தலலிங்க மாகையால் அவ்விலிங்கத்தைக் கலந்து வாராநின்ற விடயங்க ளெல்லாம் அவ்விலிங்காப்பிதமாக்கி, அவ்விலிங்கப் பிரசாதமாய்ப் புசிப்

படுதே ஞானவிரதம். ஆநுபவ மேலாகிய அநுபவம். அதுவே மகத்தாகிய சீலம். இம் மகத்தாகிய அநுபவமன்றித் தனக்கன்னியமாகிய சடபதார்த்தங்களுக்குச் சீலம் உண்டென்பது கூடாது. இவ்வாறிருக்க - அச் சடபதார்த்தங்களுக்கு ஆசாரம் கற்பித்துச் சங்கற்ப விகற்பத்துடன் கூடிக்கொண்டிருக்கும் புத்தியை யுடையவர்கட்கு, ஒருகாலும் சிவஞானம் பிரகாசியாது. ஆகலின், அவற்றை விடுத்து யாம் கூறிய வீரசைவ நெறியில் நின்று சிவஞானம் உதிக்கப்பெற்றுச் சிவசாயுச்சியம் பெறக்கடவாய்.

அது கேட்ட சீடன் - அஞ்ஞான ஐய விபரீதங்களை யகற்றி எனது உள்ளத்தைத் தெளிவித்தருளிய ஐயனே! எனது உடல் பொருள் ஆவி மூன்றும் முனபோ லன்றித் தேவரீருடைய பொருள்களாய் விட்டமையால், யான் செயயும் கைம்மாறுகயாது உளது? இன்னும் அடியேன் உய்யுமாறு தீக்ஷைபுரிந்து ஆட்கொண்டருள வேண்டுமென வேணடிக் கொள்ளலும், ஆசிரியர் கருணை கூர்ந்து அப்படியே அநுக்கிரகிப்பேர்ம நமது அருகே இருக்கக்கடவாய் என்று கட்டளையிட்டுத் தீக்ஷைபுரிந்து அடிமைகொண்டருளினர்.

திருச்சிற்றம்பலம்.

வீரசைவவினாவிடை முற்றிற்று

சிவப்பிரகாசதேசிகர் திருவடிவாழ்க.

# அறிக்கை.

இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னை சஞ்சீவிராயன் பேட்டை சஞ்சீவிராயன் கோயில் வீதியில் வீரசைவ சமயாபிவிர்த்திச்சபை ஸ்தாபித்திருக்கும் 17-வது எண்ணுள்ள வீட்டில் ஷை சபையினது காரியதரிசியின் மருகராகிய புதுவை - கீலி - கலியாணி முதலியார் என்று வழங்கும் கலியாணித்தம்பிரான் குமாரர் ம-ா-ா-ஸ்ரீ, சொக்கலிங்கத் தம்பிரானவர்க ளிடத்திலும், திருப்பாதிரிப்புலியூர்ச் சந்நிதி வீதியில் திருக்கோவலூர் ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளாதீனம் ஐந்தாவது பட்டம் ஸ்ரீமத் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியசுவாமிக ளிடத்திலும், சிதம்பரத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலை உபாத்தியாயராகிய ம-ா-ா-ஸ்ரீ, சோ. குமாரவேலைய ரவர்களிடத்திலும், கும்பகோணத்தில் ஜவுளிவியாபாரம்-ம-ா-ா-ஸ்ரீ, திருவெவ்வளூர் - இராமசாமிச் செட்டியா ரவர்க ளிடத்திலும் விலை அணா - 8. கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

## இனி உடனே அச்சிற் பதிப்பிக்கப்படும் புத்தகங்கள்:—

மந்திரகோப்பியம்.
பரிபூரணசித்தியார்.
பரமரகசியம்.
அனுபோகசூத்திரம்.
மகாலிங்கவிதாரச்சனை.
சிவசரணர்புராணம்.
சிவசரணர்புராணசாரம்.
ஆராத்திரியர்புராணம்.
பரமரகசியசட்த்தலம்.
திருநந்தனவனச்சிறப்பு.
திருவேடச்சிறப்பு.
அறுபத்துநான்குசீலம்
விபூதிமகிமை.
உருத்திராக்கமகிமை.
பஞ்சாக்கரமகிமை.
உற்சவவிளக்கம்.
புட்பவிதி.
பூஜாவிதி.